K.R.No.833/65
2/2 P
MADRAS RECORD OFFICE
5708/L
9-NOV 1965
MADRAS
மேழிச்செல்வம்
* விசுவாசு ௵ ஐப்பசி ௴ 25 பைசா

தஞ்சாவூரில் தீவிர சாகுபடித் திட்டத்தில் உள்ள கிராம சேவிகா, முக்கிய சேவிகாக்களுக்கு 12—7—1965 முதல் 17—7—1965 வரை இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு விவசாயத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. அப்பயிற்சியின்போது அவர்களுக்கு நேரடி விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. பயிற்சியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இங்கு வெளியிடப்படுகிறது.

பயிற்சியின்போது விதைக்கருவியில் விதைகளுக்கு மருந்து கலக்க பயிற்சி பெறுதல்



பயிற்சியில் 'சேவிகாக்கள்' நெற்பயிர் வரிசை நடவு செய்தல்

பயிற்சியின்போது அவர்களே நெல் வயல்களில் இடையுழவுக் கருவிகளை உபயோகிக்க பயிற்சி பெறுதல்.

விவசாயிகளுக்கு......!

விவசாய சம்பந்தமான கேள்விகளுக்கு 'மேழிச் செல்வம்' பத்திரிகை மூலமாக பதில் அளிக்க ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்தி விவ சாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கம் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி தங்கள் முகவரியுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பு மாறு கோரப்படுகிருர்கள்.

கேள்விகள் அனுப்பப்படவேண்டிய முகவரி—

மேழிச்செல்வம் கேள்வியும் பதிலும்

விஸ்தரிப்பு நிபுணர்,

விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக்கூடம்,

கோயமுத்தூர்-3.

குறிப்பு :—கேள்விக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத் தான் தெரிவிக்கப்படும் என்பதை அறிவித்துக்கொள் கிறோம்.

அறிவிப்பு

மூன்று செட் டி.சி. ஜெனரேட்டர்கள், (இரண்டு செட் ஏ.சி. மோட்டார்களுடனும், ஒரு செட் டி. சி. பேட்டரியுடனும் இணைக்கப்பட்டவை) விற்பனைக்கு உள்ளன. தேவையான வர்கள் கீழ்கண்ட முகவரிக்கு எழுதி முழுவிவரங் களும் அறியலாம்.

முதல்வர்,

விவசாயக் கல்லூரி ஆய்வுக் கூடம்,

கோயம்புத்தூர்.3.

மேழிச்செல்வம்

வருடாந்தர சந்தா	ரூ. 3·00
தனிப் பிரதி	ரூ. 0·25
ஆண்டு மலர்	ரூ. 0·50

உள்ளுரை

	பக்கம்
அன்புடையீர் ..	5
வெற்றிகரமான வெண்டை விதைப் பெருக்கம் ..	7
மானுவாரி பூமியில் கரிமப் பொருளின் அத்யாவசியம் ..	10
விவசாயச் செய்திக் கதிர் ..	11
விஞ்ஞான விவசாயம் (பாட்டு) ..	12
நெற்பயிரில் ஆனைக் கொம்பனைத் தடுக்க நூதன பூச்சி மருந்துகள்.	13
கொளுஞ்சி விதையில் பாக்டீரியாக் கரை சல் கலந்து விதைத்ததில் ஏற்பட்ட நன்மைகள்.	14
கேள்வியும் பதிலும் ..	16
காய்கறி தோட்டப் போட்டி பரிசளிப்பு விழா.	19
வெண்டைச் செடியில் நோய்கள் ..	20
வானொலிச் செய்திகள் ..	22
எக்ஸ் 3 வீரிய கம்பு ..	26
பாலும் பாத்திரமும் ..	27
1965-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதக் கால நிலை அறிக்கை.	29

விளம்பரங்கள் :

டி. எ. 65/203 ..	4
ரங்கசாமி அண்டு கோ ..	9, 21
ஸ்டார் பிராண்டு ..	12
பொட்டாஷ் ..	15
டி. எ. வி. பி. 65/எப்-1 ..	17
டாடா பைஸன் ராலீஸ் ..	25
டி. எ. 65 F 2 ..	24
ராஜா பண்ணைத் தோட்டம் ..	29

ஒன்று மூன்றாகுமா?

ஆகும். திடீரென்று காய்ச்சல்,
உடனடியாக மருந்து தேவை, விபத்து
அல்லது மரணம், இது போன்ற
நிலையில் மிகமிக அவசரமாகச் செய்தி
செல்லவேண்டும். அப்போது
உங்கள் எக்ஸ்பிரஸ் தந்திகளை மற்ற
எல்லா எக்ஸ்பிரஸ் தந்திகளையும்
விட மும்மடங்கு வேகத்தில்
துரிதமாக அனுப்பி வைக்கிறோம்.
உங்கள் சோகத்தில் நாங்களும்
பங்கு எடுத்துக்கொண்டு செய்யும்
சேவை இது. இதற்காக கூடுதல்
கட்டணம் ஒன்றும் கிடையாது.
பல வழிகளிலும் உங்களுக்கு நல்ல
சேவை செய்ய முயற்சிக்கிறோம்.
இது ஓர் உதாரணம். எப்பொழுதும்
சிறப்பான சேவை எங்கள் நோக்கம்.

தபால் - தந்தி இலாகா

0A-65/203

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனு
லுழந்தும் உழவே தலை.

மலர் 22 | விசுவாவசுஸூ ஐப்பசிமீ 1965—அக்டோபர்-நவம்பர் | இதழ் 10

க. வே. ராமநாதன், ஐ.ஏ.எஸ்.
விவசாய நெறியாளர்.

சென்னை,
25—10—'65.

அன்புடையீர்,

எல்லையிலே எதிரிகள் ஆக்ரமிப்பு செய்துள்ள இந்த நேரத்தில், நம் கடமையை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம். பெறற்கரிய விடுதலை பெற்றபின், பொருளாதார முன்னேற்றம் பெற பாடுபட்டோம். நம் முன்னேற்றப் பாதையிலே ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை தான் இந்த ஆக்கிரமிப்பு!

சுதந்திரச் சுடரை, விடுதலை விளக்கை நாம் காப்பாற்ற வேண்டிய தருணம் இது. உற்றாரையும் பெற்றோரையும் பிரிந்து, தன்னலம் கருதாது தாய் நாட்டின் மானம் காக்க போர்க்கோலம் பூண்டுள்ள எண்ணற்ற நமது வீரர்களை நாம் பராமரித்து பாதுகாக்க வேண்டும். கண் துஞ்சாது, மெய் வருத்தம் பாராது, கருமமே கண்ணுயிருக்கும் அந்த தியாகச் செம்மல்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமை பெரியதாகும். அது பெரியது மட்டுமல்ல; பெருமைக்குரியதுமாகும்.

இதுவரை இருந்த நிலை வேறு! இன்று நிலவும் நிலைமை வேறு. நேற்று வரை, திட்டங்கள் பலவகுத்து படிப்படியாக முன்னேறி தன்னிறைவு பெற முயன்றுக் கொண்டிருந்தோம். இன்று நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. பிறர் கைநோக்கிக் காத்திராமல் நம் கையையே நம்பி வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பிறரை நம்பி வாழாமல், தன்னிறைவு பெற்றே தீர வேண்டிய அவசியம் உண்டாகியுள்ளது.

போர் முனையில் நாம் வெற்றி பெற, ஏர் முனையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய கடமை நமக்கு ஏற்பட்டுள்ளது. எனவே உணவு உற்பத்தியை நாம் உடனடியாகப் பெருக்க வேண்டும்.

ஒப்புக்கு 'ஜப்பான் சாகுபடி முறை' என்று வெறும் 'வரிசை நடவு' மட்டும் செய்து பயனில்லை. திட்டங்கள் வெற்றிபெற, அவற்றை சீரிய முறையில் முழுமையாக செயல்படுத்த வேண்டும். இடத்துக்கும், பருவத்துக்கும் ஏற்ற பொறுக்கு விதைகளை போதுமான அளவில் உபயோகித்தல், பயிர்களுக்குத் தேவையான உணவுச் சத்துக்களை வேண்டிய அளவில் இடுதல், பூச்சி பூசணங்களால் சேதமேற்படா வண்ணம் பயிர்ப் பாதுகாப்பு செய்தல், களைகளை

அகற்ற முறையான இடையுழவு செய்தல், முற்றியபின் அறுவடை செய்தல் போன்ற கட்டுக்கோப்பு முறைகளை முழுவதும் கையாண்டு சாகுபடி செய்தால், விளைச்சல் நிச்சயம் பெருகும்.

விளைச்சலைப் பெருக்க மற்றெல்லாவற்றையும்விட உரமிடுதல் மிக முக்கியமாகும். அதிக உரமேற்று கூடுதல் விளைச்சல் தரும் ஆடுதுறை 27 போன்ற நெல் ரகங்களும், சி.எஸ்.ஹெச். 1 சோளம், ஹெச். பி. 1 கம்பு போன்ற ரகங்களையும் பயிரிட்டு, விளைச்சலை கணிசமான அளவில் பெருக்க வேண்டும். உரமிடுதலை எண்ணும்போது, உரப் பற்றுக்குறை உங்கள் நினைவில் தோன்றலாம். தேவையானப் உரங்களை போதுமான அளவில் விநியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ரசாயன உரங்களை மட்டுமே நம்பியிராமல், தழையுரம் பயிரிட்டும், கம்போஸ்ட் உரம் தயாரித்தும், விவசாயிகள் தங்கள் சுய தேவைகளை கணிசமான அளவில் நிறைவேற்றிக்கொள்ள முன்வர வேண்டும்.

உணவு உற்பத்தியைப் பெருக்க நீங்கள் சிந்தும் ஒவ்வொரு துளி வியர்வையும், போர் முனையில் பணியாற்றும் நம் வீரர்களுக்கு அளிக்கும் ரத்தத் துளிகளாகும். நீங்கள் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு தானிய மணியும், நாட்டுப் பாதுகாப்புக்கு நீங்கள் அளிக்கும் பொற்காசாகும்.

உணவு தானியங்களைப் பெருக்குவதுடன் உங்கள் பணி முடிந்துவிடவில்லை. அந்நிய செலாவணி ஈட்ட தென்னையும் பிற எண்ணெ வித்துக்களும், வாழையும், மாவும், கரும்பும், கனி வகைகளும், முந்திரியும், பருத்தியும் இன்ன பிற பணப் பயிர்களும் பயிரிட்டு உற்பத்தி பெருகச் செய்ய வேண்டும்.

இருக்கின்ற நிலப் பரப்பில் குறுகிய காலப் பயிர் செய்தும், கலப்புப் பயிர் செய்தும், தீவிர முறை சாகுபடிகளைப் பின்பற்றியும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். வீடுகளிலும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பிற பொது இடங்களிலும் உள்ள வெற்றிடங்களில் 'வீட்டுக் காய்கறித் தோட்டம்' போட்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

விவசாய விஸ்தரிப்பு அலுவலரும், பிற விஸ்தரிப்பு ஊழியர்களும் சிபாரிசு செய்யும் சாகுபடி முறைகளை நீங்கள் சீர்தூக்கிப் பார்த்து செயல்படுத்த வேண்டும். நாட்டின் நாயகர்கள் நீங்கள்! அவர்கள் உங்களுக்கு நற்பணி புரியும் நண்பர்கள்! இதை உணர்ந்து இருபாலாரும் செயல்பட வேண்டும்.

காலத்தில் உங்கள்கடமையுணர்ந்து பணியாற்றி, உற்பத்தி பெருகச் செய்து தமிழ்நாடு தன்னிறைவு பெறுவதோடு நில்லாமல், தரணி முழுவதற்கும் உணவுப் பொருட்களை அனுப்பும் நிலைமையை நீங்கள் ஏற்படுத்த முடியும் என்பது எனது முழு நம்பிக்கையாகும்.

உங்கள் உழைப்பால் அந்த நிலை ஏற்பட்டால்—

நான் மட்டும் அல்ல—இந்த நாடே உங்களுக்கு நன்றி செலுத்தும்.

அன்புள்ள,

க. வே. [signature]

"வெற்றிகரமான வெண்டை விதைப் பெருக்கம்"

[த. கணபதி, B.Sc. (Ag.) DH.]

'பூசாசவானி' என்ற வெண்டையைப் பற்றி காய்கறி சாகுபடியாளர்கள் நன்கு அறிவார்கள். ஏன்; வெண்டைக்காய் சாப்பிடுபவர்களும் அறிவார்கள்! அவ்வளவுக்கு இந்த ரகம் நல்ல பெயர் பெற்றுள்ளது. இந்த ரகத்திற்கான சிறப்பான குணங்களே அதன் விரைவான புகழுக்குக் காரணமாகும்.

பூசாசவானி வெண்டை விரைவில் காய்க்கக் கூடியது. பச்சை நிறக்காய்களை அதிகமாகக் கொடுக்கக்கூடியது. அதிக சுனை கிடையாது. பச்சைக் காயும் நல்ல ருசியாக இருக்கும். மற்ற சாதாரண ரகத்தைத் தாக்கக் கூடிய நரம்பு வெளுப்பு நோய் பூசாசவானியைத் தாக்குவதில்லை. அதனால் செழித்து வளர்ந்து நிறைய மகசூலையும், வருவாயையும் தருகிறது.

ஆகவே வெண்டை பயிர் செய்வோர் விரும்பிக் கேட்கும் ரகம் பூசாசவானியாகிவிட்டது. உதாரணமாக, பட்டுக்கோட்டை கிராமிய விஸ்தரிப்புப் பயிற்சி நிலையத்தைச் சுற்றியுள்ள ஓரிரு கிராமங்களில் வெண்டை சாகுபடி நெடுநாட்களாக செய்து வருகிறார்கள். வெண்டை மேட்டு நிலங்களிலும், ஒரு போக நஞ்சை நிலங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. இப் பகுதியினர் 1960-ம் வருடத்திற்கு முன்பு சாதாரணமான நாட்டு வெண்டைப் பயிர் செய்து வந்தனர். நாட்டு வெண்டையில் நரம்பு வெளுப்பு நோய் ஏற்படுவதால் வெண்டையின் தரம், விளைச்சல் முதலியன பாதிக்கப்பட்டு, பலர் வெண்டை சாகுபடியையே நிறுத்திவிட்டனர். 1960-ம் வருடத்தில் அக் கிராமங்களில் டெல்லி எக்ஸ்டன்ஷன் டைரக்டரேட் (Directorate of Extension, New Delhi) லிருந்து அனுப்பப்பட்ட சில அவுன்ஸ் நிறையுள்ள பூசாசவானி விதையைக் கொண்டு பலன் நிரூபணம் (Result Demonstration) போட்டுக் காட்டப்பட்டது. பூசாசவானி வெண்டையின் சிறப்புத் தன்மைகளை நேரடியாகக் கண்ட அக் கிராமத்தார்கள், இந்த நல்ல ரக வெண்டையைப் பயிர் செய்ய முன் வந்தனர். ஏற்கெனவே வெண்டை பயிர் செய்து விட்டவர்களும தொடர்ந்து தைரியமாகச் செய்ய முன்வந்தனர். இக் கிராமத்தில் இந்த ரக வெண்டை நல்ல பலன் தருவதைக் கண்ட சுற்றுப்புற கிராமத்தவர்களும் இந்த ரக வெண்டையைச் சாகுபடி செய்ய ஆரம்பித்தனர். இதன் காரணமாக வெண்டை விதைக்கான கிராக்கி மிக விரைவில் அதிகரித்துவிட்டது. இந்த சூழ்நிலையை உணர்ந்து அதிக விதை உற்பத்திக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலையத்திலேயே மேற்படி ரகத்தை பயிர் செய்து விநியோகிக்கப் பட்டு வருகிறது.

சாதாரணமாக ஏக்கருக்கு 200–250 கிலோ விதை வீதம் தயாரிக்கப்பட்டது. இம் முயற்சியில் இன்னும் சிறப்பான சாதனைகள் செய்ய முயற்சித்துக் கடைசியில் ஏக்கருக்கு 477 கிலோ வரை உற்பத்தி செய்யப்பட்டது.

இந்த அதிக உற்பத்தி கீழ்க்கண்ட முறைகளை அனுசரித்து பெறப்பட்டது :—

நிலத்தை முதலில் இரும்புக் கலப்பையால் மூன்று முறை நன்றாக உழப்பட்டது. ஆரம்ப உரமாக ஏக்கருக்கு 40 வண்டி மாட்டுரமும், 150 கிலோ சூப்பரும் இடப்பட்டது. நிலத்தை சமப்படுத்தி 6–9 அங்குலம் உயரமான மேட்டு பாத்திகள் 4 அடி அகலத்திலும், 15 அடி நீளத்திலும் அமைக்கப்பட்டன. பாத்திகளில் 2 அடி இடைவெளி வரிசையில் $1\frac{1}{2}$ அடிக்கு 2 விதை வீதம் மார்கழிப்பட்டத்தில் ஊன்றப்பட்டது. இதற்கு ஏக்கருக்கு 2·5 கிலோ விதை தேவைப்பட்டது.

விதைப்பதற்கு முன்பு விதையை தண்ணீரில் போட்டு, மிதக்கும் விதைகளை நீக்கிவிட்டு மூழ்கிய விதைகளை ஒரு இரவு தண்ணீரில் ஊறவைத்து பின்பு பாத்திகளில் ஊன்றப்பட்டது. இதனால் விதைகள் விரைவில், எளிதில் முளைக்க ஏதுவாகின்றது. விதைத்து 5 நாட்களில் முளைக்காத இடங்களில் மறுபடியும் விதைகள் ஊன்றப்பட்டு காலி இடங்கள் நிரப்பப்பட்டன.

விதைத்து 15 நாட்களுக்குப் பிறகு செடி மூன்று இலையுடன் இருக்கும்பொழுது மண்ணை $\frac{1}{2}$-லிருந்து 1 அங்குலம் ஆழத்திற்கு களைக்கொத்தால் கீறிவிடப்பட்டது. அதோடு செடிகளை குழிக்கு இரண்டு வீதம் விட்டு அதிகமாக உள்ள செடிகள் நீக்கப்பட்டன. கீறப்பட்ட மண் நன்றாக உலர்வதற்கு 2–3 நாட்கள் விடப்பட்டது. பின்பு ஏக்கருக்கு 54 கிலோ அம். சல்பேட் போடப்பட்டது. உரமிட்டு 4 நாட்களுக்கு தொடர்ந்து குளிர தண்ணீர் பாய்ச்சப் பட்டது.

விதை விதைத்த 30-வது நாளில் மறு முறையும் நிலத்தை 2-லிருந்து $2\frac{1}{2}$ அங்குலம் ஆழத்திற்குக் கீறி களையெடுத்து 5–6 நாட்களுக்கு உலரவிட்டு ஏக்கருக்கு 164 கிலோ அம். சல்பேட் போடப்பட்டது. உரத்தை, செடியைச் சுற்றி வட்ட வடிவமாக செடியை விட்டு 5–6 அங்குலம் அப்பால் போடப்பட்டது, உரமிட்டபின் தொடர்ந்து 5 நாட்கள் குளிர தண்ணீர் பாய்ச்சப்பட்டது. தொடர்ந்து வழக்கம்போல் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்டப்பட்டது.

செடி காய்ப்புக்கு வந்ததும் அதிலிருந்து காய்கள் பறிக்காது விடப்பட்டது. செடிக்கு குறைந்தது 10 காய்கள் வரை இருந்தன. காய்கள் காய்ந்து நெற்றாக மாறியதும் அவைகள் சேகரிக்கப்பட்டன. நெற்றுக்கள் விதைத்து 45 நாட்களிலிருந்து 100-வது நாள் வரை சேகரிக்கப்பட்டன. நெற்றை உலரவைத்து அவற்றிலிருந்து விதையைப் பிரித்து பின் அவற்றை தண்ணீரில் போட்டு மூழ்கிய நல்ல விதைகளை மட்டும் சேகரித்து உலர்த்திப் பக்குவப்படுத்தப்பட்டது.

பழுதில்லாத நெற்றிலிருந்து 80 விதைகள் வரை கிடைக்கும். ஆனால் சராசரியாக 55 விதைகள் வரை, அதாவது 4 கிராம் நிறை விதை கிடைக்கும். ஆகவே 1 கிலோ விதை தயார் செய்ய 250 நெற்றுக்கள் போதுமானதாகும்.

செடிகள் நன்றாக வளர்ந்து பலன் தருவதற்கு அவை நன்றாக பாதுகாக்கப்படவேண்டும். பொதுவாக வெண்டைக்கு தத்துப்பூச்சிகள், அசுவினிகள், தண்டுதுளைப்பான்கள், காய்துளைப்பான்கள், உண்ணி போன்றவைகள் தீங்கு செய்கின்றன. இவற்றை வரு முன்பே தடுக்கவேண்டும். இதற்காக இரண்டு வாரத்திற்கு ஒரு முறை மருந்துகள் தெளிக்கப்பட்டன. செவின் மருந்தைத் தூவியதில், பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டதோடு, செடிகள் துரித வளர்ச்சியையும் பெற்றது. டீல்ட்ரின் என்ற மருந்தும் தூவப்பட்டது. இதுவும் துளைப்பான் போன்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்தியது. உண்ணிகள் வராவண்ணம் கந்தகத் தூளையும் அவ்வப்போது மற்ற மருந்துகள் தூவியபின் மாற்றி மாற்றி தூவப்பட்டது. வெண்டைக்கு நல்ல பாதுகாப்பு கொடுக்க விதைத்து 15-ம் நாளிலிருந்து 2 வாரத்திற்கு ஒரு முறை அல்லது தேவைக்கு ஏற்ப, பூச்சி, பூஞ்சண மருந்தை தூவவோ, தெளிக்கவோ வேண்டும். கந்தகம் உண்ணியைத் தடுப்பதோடு, சாம்பல் நோய், இலைப்புள்ளி நோய் இவற்றையும் தடுக்க ஏதுவாக அமைகிறது.

மேற்கூறிய முறைகள் 13 சென்டில் அனுசரிக்கப்பட்டது. அதிலிருந்து 62 கிலோ விதை கிடைத்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு ஒரு ஏக்கருக்காகும் சாகுபடிக்கான செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அதாவது சென்டிற்கு 4·77 கிலோ வரை கிடைத்தது. சாகுபடி கணக்கு எடுத்துப் பார்த்ததில் ஒரு கிலோவிற்கான அடக்க விலை ரூ. 1·43 தான் ஆகிறது. ஆனால் சாதாரணமாக ஒரு கிலோ விதை ரூ. 10-லிருந்து ரூ. 14 வரை விற்கப்படுகிறது. ஆகவே விதையாக உற்பத்தி செய்வதில் ஏற்படும் ஆதாயமும் நன்றாக விளங்கும்.

	ஏர். 1	ஆண். 2	பெண். 3	மொத்தம். 4 ரூ. பை.
கூலி விவரம் ஒன்றுக்கு ரூ.	3.50	1.50	1.00	
1. முன்செய் நேர்த்தி				
3 உழவு	8	..	..	28.00
சமப்படுத்தி மேட்டுப் பாத்திகள் அமைக்க.	..	6	..	9.00
			மொத்தம்	37 00
2. விதையும் விதைப்பும்				
2½ கிலோ விதையின் விலை—கிலோ 10 ரூபாய் வீதம்.	..	..	..	25.00
விதைப்புக் கூலி	..	..	6	6.00
			மொத்தம்	31 00

	ஏர். 1	ஆண். 2	பெண். 3	மொத்தம். 4 ரூ. பை.
3. உரமும் உரமிடுதலும்				
40 வண்டி மாட்டுரம்—வண்டி ரூ. 4 வீதம்.	..	..	..	160·00
137 கிலோ சூப்பர்—கிலோ 25 காசு வீதம்.	..	.	..	34·25
218 கிலோ அம். சல்பேட்—கிலோ 40 காசு வீதம்.	..	..	..	87·20
எரு சிதறவிட	..	4	..	6·00
உரம் போட	..	..	15	15.00
			மொத்தம்	302 45
4. பின்செய் நேர்த்தி				
முதல் களை	..	..	8	8·00
2–ம் களை	..	..	15	15·00
மூன்று முறை பாலிடால் தெளிக்க—	..	4	..	6·00
பாலிடால் கிரையம்	..	..	..	15·00
இரண்டு முறை டீல்டிரின் தூவ	..	1	..	1·50
டீல்டரின் விலை 40 ராத்தல்—ஒரு ராத்தல் 6 காசு.	..	..	..	2·40
1 முறை கந்தகம் தூவ.	..	½	..	0·75
கந்தகத்தின் விலை 10 ராத்தல்.	..	..	..	2·50
			மொத்தம்	51 15
5. நீர் பாய்ச்சுதல்				
முறைக்கு ரூ. 3·50 வீதம் 28 முறை தண்ணிர் பாய்ச்ச.	..	..	..	98·00
			மொத்தம்	98 00
6. அறுவடை				
நெற்றுப் பறிக்க	..	..	60	60·00
விதையைப் பிரித்துப் பக்குவப்படுத்த.	..	..	100	100·00
			மொத்தம்	160 00
			மொத்த சாகுபடி செலவு	679·60

கிடைத்த விதையின் அளவு ..	477·00 கிலோ	
	ரூ. பை.	
மொத்த செலவு	679·60	
1 கிலோவிற்கான கிரையம்	679·60 / 477·	1.43

நல்ல விதைகள் நல்ல மகசூலைத் தரும். அம்மாதிரியான தரமான விதைகளுக்கு நல்ல கிராக்கியும் இருக்கும். அத்தேவையைப் பூர்த்தி செய்ய அதிகப்படியான விதைகளை நல்ல முறையில் தயாரிப்பது அவசியமாகிறது. ஆகவே மேற்கூறிய முறைகளை அனுசரிப்பதால் நல்ல விதையை அதிகமாக உற்பத்தி செய்து நல்ல லாபத்தையும் அடையலாம்.

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளரால் C.1. 40404-64 தேதி 21-4-64 உத்தரவின்படி

1964-65 " ரேட் கான்ட்ராக்ட் " திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட

ஸ்பிரேயர்கள்



' கேடார் '

அசைப்பு ஸ்ப்ரேயர்



' மாருதி '

ஃபுட் ஸ்ப்ரேயர்



' மாருத் '

கையமுத்த ஸ்ப்ரேயர்



' கேடார்-கோஃபி '

அசைப்பு ஸ்ப்ரேயர்

தயாரிப்பாளர்கள் :

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

மார்வே ரோடு, மலாடு, பம்பாய்–64.

தமிழ்நாடு, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,

75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், தபால் பெட்டி நெ. 539, பெங்களூர்-2.

மானாவாரி பூமியில் கரிமப் பொருளின் அத்யாவசியம்

[M. சொக்கலிங்கம், B. Sc. (Ag) திருச்சி.]

"ஏரினும் நன்றாம் எருவிடுதல்; கட்ட பின்
நீரினும் நன்றதன் காப்பு"

என்று எருவிடுதலின் அவசியத்தை அன்றே உணர்ந்து வள்ளுவர் அழகுற வலியுறுத்தி கூறியிருக்கிறார். நிலம் செழுமையுடனிருக்க கரிமப் பொருள் (Organic matter) விளை நிலத்திற்கு இன்றியமையாததாகும். பெரும்பாலும் விவசாயிகள் எருவை நஞ்சை, தோட்டக்கால் நிலங்களுக்குத்தான் இடுகிறார்கள். மானாவாரி பூமியில் எருவிடுதல் மிகக் குறைவாகும். மானாவாரி பூமிகளுக்குத்தான் கரிமப் பொருள் மிக அவசியமாகிறது. இறைவை நிலங்களில் இரசாயன உரத்தைக் கொண்டே பயிர் விளைச்சலை அதிகப்படுத்தலாம். ஆனால் மழை குறைந்த, நிச்சயமற்ற மானாவாரி பூமிகளில் இதை அவ்வளவு மிகுதியாக பயன்படுத்த முடியாது. கரிமப் பொருள் மானாவாரி நிலத்தில் செய்யும் நேர்முக, மறைமுக நன்மைகள் பலப்பல. சுருங்கக் கூறின் பூமியின் வளப்பம், விளைவுத்திறன் நிரந்தரமாக பாதுகாக்கப்பட்டு தொடர்ந்து அதிக விளைவை உண்டாக்குகிறது.

நேரிடையாக விளைபயிர்களுக்கு முக்கியமாக வேண்டிய தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து முதலியவற்றையும், சில பயிர்களுக்கு சிறப்பாக வேண்டிய நுண் ஊட்டங்களும் (Trace elements) கொடுத்துதவும், பயிர் உணவுகளின் களஞ்சியமாக கரிமப்பொருள் விளங்குகிறது.

கரிமப்பொருள் நன்றாக மக்கி, மண்ணுடன் சேர்ந்து, நுண் கட்டிகளை உண்டாக்கி, மண் அமைப்பை (Soil structure) சீரிய முறையில் அமைக்கிறது. இதனால் நுண் துளைகள் பெருகி நல்ல காற்றோட்டம் உண்டாவதால் செடிகளின் வேர்களுக்கும், பூமியில் வாழும் பாக்டீரியாக்களுக்கும் பிராணவாயு கிடைக்க நல்ல வசதி ஏற்படுகிறது. மண், வடிகால் வசதி பெருகி நீர் பூமியினுள் இறங்குவதற்கு (Infiltration) வாய்ப்பளிக்கிறது.

பூமியிலிருக்கும் நன்மை செய்யும் நுண்ணுயிர்களுக்கும், பாக்டீரியாக்களுக்கும் கரிமப் பொருள் உணவாகப் பயன்படுவதால், அவைகள் ஊக்குவிக்கப்பட்டு பன்மடங்கு பெருகி திறமையாக வேலை செய்கிறது. இதனால் தாவரசத்துக்கள், பயிர்களுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் மாற்றி அமைக்கப்படுகிறது. பூமியின் கரிமப் பொருளால் விளை நிலத்தின் உஷ்ண நிலை ஓரளவு கட்டுப்படுத்தப்படுகிறது. இந்நிலை பாக்டீரியாக்களின் பெருக்கத்திற்கும் விதை முளைப்பிற்கும் அவசியமாகும். குறு மண் நிலம் தான் பயிர்விளைவிற்கு ஏற்ற சூழ்நிலையுள்ள பூமியாகும். இதற்கு மாறாக உள்ள களி, மணற் பூமிகள் விளைவிற்கு ஏற்றதல்ல. இத்தகைய நிலங்களில் கரிமப் பொருள் சேர்ந்து, நல்ல மண் அமைப்பை உண்டாக்குவதன் மூலம் களிபூமிகளில் நல்ல நீர் உள் இறங்கும் தன்மையையும், காற்றோட்டத்தையும், மணற்பாங்கான நிலத்தில் நீர்ஏற்கும் திறனையும் (Water holding capacity) அதிகப்படுத்துகிறது. மானாவாரி பூமியில் பெய்த மழை நஷ்டமாகாமல் பூமியினுள் இறங்கி பிடித்து வைக்கப்படுவதால் பயிர்களுக்கு பிற்பாடு உதவுகிறது. மழைக்காலத்தில் அதிகமான நீர் உள் இறங்குவதன் மூலம், வெளிநீரோட்டம் (Run-off) குறைந்து, மண்ணரிமானம் தடைப்படுகின்றது. கரிமப்பொருள் அதிகம் உள்ள பூமிகளில் அதிகமான நீர் உறிஞ்சப்பட்டு ஈரம் பூமியில் பரந்து பாதுகாக்கப்படுகிறது. கரிமப் பொருள் தானும் ஒரு பகுதி நீரை உறிஞ்சிக் கொண்டு, மண்ணும் ஓரளவு பிடித்து வைத்துக்கொள்ள வழியை ஏற்படுத்துகிறது. கரிமப் பொருள் பஞ்சு போன்று இயங்கி தன் எடையைப் போன்று ஒன்று, இரண்டு மடங்கு நீரைப் பிடித்து வைத்துக்கொள்கிறது. மேலும் தழைகளாகவும், அறுதாள் கட்டை, வேர்க்கட்டைகளாகவும் பூமியின் மேல் பரந்து மூடிக்கொண்டிருக்கும்பொழுது சரிவான மானாவாரி பூமிகளில் மழை, காற்று ஆகியவைகளின் நேரிடைத் தாக்குதலால் ஏற்படும் மண் அரிமானம் வெகுவாக தடுக்கப்படுகிறது. கரிமப் பொருள் அடங்கிய பூமிகளில் உஷ்ண குறைவு ஏற்படுவதாலும், நீரை பிடித்து வைத்துக்கொள்வதாலும், நீராவி மூலம் ஏற்படும் நஷ்டம் குறைகிறது.

சீரிய மண்ணமைப்பு, காற்றோட்டம், நீரோட்ட வசதி, நீர் உள் இறங்கும் சக்தி, நீர் ஏற்கும் திறன் அதிகரித்தல், வெளி நீரோட்டக் குறைவு, மண் அரிமானம் தடைபடுதல் ஆகிய பயிர் விளைவிற்கேற்ற நன்மைகளை கரிமப்பொருள் பூமியில் ஏற்படுத்துகிறது. விளை நிலத்தில் இத்தகைய சூழ்நிலை பயிரின் விளைவை ஊக்குவிக்க அவசியமாகும். அவை ஒன்று பாதிக்கப்பட்டாலும் பயிரின் விளைவு அதற்கேற்ப குறையும். எல்லா வசதிகளும் ஒன்று சேர்ந்து நல்ல முறையில் அமையும் போது பயிரின் விளைவு பன்மடங்கு பெருகுகிறது.

நம் மானாவாரி பூமிகளுக்கு 2 வருடத்திற்கு ஒரு முறை ஏக்கருக்கு 5 டன் கரிமப் பொருள் (தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு) சேர்ப்பது லாபகரமானது என்று ஆராய்ச்சியின் மூலம் தெரிய வருகிறது. மானாவாரி நிலங்களில் ஐப்போமியா போன்ற வரட்சி தாங்கும் செடிகளை வரப்புகளில் நட்டு பயிரிட்டால் வேண்டிய கரிமப் பொருள் கிடைக்க வசதி ஏற்படும். மானாவரி நிலத்தில் போடப்படும் காண்டூர் வரப்புகளில் 3–4 அடிக்கு ஒன்றாக ஐப்போமியா குச்சிகளை நட்டுப் பயிர் செய்தால் ஒரு ஏக்கர் வரப்பில் 80–100 குச்சிகள் வரையில் நடக்கூடும். இவைகள் தழைத்து வளரும்போது மண் வரப்புகளை பாதுகாப்பதுடன் ஒரு ஏக்கர் நிலத்திற்கு வேண்டிய கரிமப் பொருளையும் எளிதில் செலவின்றி உற்பத்தி செய்யக்கூடும்.

கரிமப் பொருளை சேர்ப்பதன் மூலம் மண் அமைப்பை சீராக்கி நீரோட்டத்தை தடை செய்து, ஈர, மண்வள பாதுகாப்பை உண்டாக்கி மானாவாரி பூமியின் விளைவை பெருக்க முடிகிறது. சென்னை மாநிலத்திலுள்ள சுமார் 56 லட்சம் ஏக்கர் மானாவாரி நிலத்தில், இத்தகைய காண்டூர் வரப்புடன், குறிப்பிட்டபடி கரிமப்பொருள் சேர்த்து விவசாயம் செய்வதன் மூலம் குறைந்த பட்சம் 4–5 லட்சம் டன் அபரிமிதமான விளைச்சல் உண்டாக்கலாம்.

நம் நாட்டின் பற்றாக்குறையைப் போக்க, 60 சதவீதத்துக்கு மேற்பட்ட இத்தகைய மானாவாரி பூமியில் தீவிர சாகுபடி அவசியமாகிறது. அரசு வகுக்கும் திட்டங்களையும், சலுகைகளையும் ஏற்று தொழு எரு, கம்போஸ்ட் எரு உற்பத்தி பெருக்கி மானாவாரி நிலத்திற்கு அதிக அளவில் இட்டு, உங்கள் வருமானத்தை அதிகரித்து, நாட்டின் செல்வத்தையும் பெருக்குவீர்களாக!

தாய் நாட்டைக் காக்க தானியம் பெருக்குங்கள்!

விவசாயச் செய்திக் கதிர்

(K. M. சுந்தரம், R. S. எர்னஸ்ட், விரிவினைப் பகுதி, விவசாயக் கல்லூரி, கோவை.)

1. ஆண்டு முழுதும் அவரைக்காய்.—தற்போது பயிரிடப்பட்டு வரும் வீட்டு அவரையும், மொச்சையும் ஆடி மாதம் விதைக்கப்பட்டு கார்த்திகை-மார்கழி மாதங்களில் காய்ப்பிற்கு வருகின்றன. ஆகையால் அவரைக்காயும் மொச்சையும் நமக்கு கார்த்திகை முதல் மாசி வரைதான் கிடைக்கின்றன.

ஆனால் தற்போது கோவை பயறு வகை ஆராய்ச்சி நிலையத்தில் அவரையையும், மொச்சையையும் ஒட்டுச் சேர்த்து உண்டாக்கப்பட்ட டி. எல். 3025 என்ற வகை நீர் வசதி உள்ள எல்லா இடங்களிலும் ஆண்டு முழுதும் பயிரிட தகுதியுள்ளதாயிருக்கிறது. இது நட்ட 50 நாளில் பலன் கொடுக்கத் தொடங்கி 120 நாட்கள் வரை பலனளிக்கிறது.

இதன் காய்களின் தோல் வெண்மை நிறத்தோடும், நல்ல சதைப் பிடிப்பாகவும், நார் குறைவாகவும் இருப்பதால் இளம் காய்களை கறி சமைக்கலாம். நன்றாக முற்றி காய்ந்தால் மொச்சையைப் போல் விதை எடுத்துப் பயன்படுத்தலாம்.

இளம் காய்களில் 30 சதம் புரதப் பொருளிருப்பதால் இது ஒரு சத்துள்ள உணவாகிறது.

ஏக்கருக்கு 1,500 கிலோ வரை இளங் காய்களும், 85 கிலோ முற்றிய மொச்சை விளைச்சலும் கிடைக்கிறது.

இந்த டி. எல். 3025 அவரையின் மற்றொரு முக்கியமான, பயனுள்ள குணம்—இது சாதாரண அவரையைப் போல் கொடியாகப் படராமல் புதராக வளர்கின்றது. ஆகையால் பந்தலிடும் வேலையும், செலவும் இல்லை.

2. மானாவாரி சோளத்திற்கு உரமிடுதலில் புதிய முறை.—மானாவாரி நிலங்களில் சோளப் பயிருக்கு சாதாரணமாக தொழுஉரம்-அல்லது கம்போஸ்ட் உரத்தைப் பரவலாக இறைத்துப் பின் உழுது மூடப்படுகிறது.

ஆனால் 5 வண்டி தொழு உரம் அல்லது கம்போஸ்டையும், 45 கிலோ அம்மோனியம் சல்பேட்டையும் உழுபடை சாலில் இட்டு, பின் விதைப்பதன் மூலம் அதிக விளைவு பெறமுடியும் என்று கோவை சிறுதானிய ஆராய்ச்சிப் பண்ணையில் நடத்திய சோதனைகளிலிருந்து தெரிய வருகிறது.

மானாவாரிச் சோளத்திற்கு பாஸ்வர உரம் தேவையில்லை.

3. பல்லாண்டு வாழ்ந்து பயனளிக்கும் பருத்தி.—மோகோ—இதுதான் பல்லாண்டு வாழும் பருத்தியின் பெயர்.

இதை மழை குறைந்த பகுதியிலும், மழை அதிகமான பகுதியிலும் பயிரிடலாம். காலநிலை மாறுதல்களினால் அதிகமாகப் பாதிக்கப்படாமல் பயனளிக்கவல்லது,

இதன் விதையிலிருந்து பஞ்சை வெகு எளிதில் எடுத்து விடலாமாதலால், கை நூற்புக்காரர்களுக்கு மிகவும் ஏற்றதும், விரும்பப்படுவதும் ஆகும்.

வீட்டின் தரிசு இடங்கள், வாய்க்கால் தோட்ட வரப்புக்கள், தென்னந்தோப்புக்கள், மற்ற பயிர் எதுவும் செய்யாத தரிசு இடங்களில் இப் பருத்தியைப் பயிரிடலாம்.

நான்கு அல்லது ஐந்து அடி இடைவெளியில் ஓரடி கன சதுரக் குழிகள் வெட்டி, அதில் ஒரு கூடை தொழு உரமிட்டு மூடிய பின், குழிக்கு இரண்டு அல்லது மூன்று விதைகளை நடலாம். நடுவதற்கு ஆனி முதல் ஆவணி முடியச் சிறந்த பருவமாகும்.

மழையில்லாமல் வறட்சியாயிருந்தால் சிறிது நீர் ஊற்ற வேண்டியிருக்கும்.

செடிகள் சுமார் 9 அங்குலம் வளர்ந்தவுடன் நன்கு வளர்ந்த ஒரு செடியை விட்டு விட்டு, மற்றவைகளைப் பிடுங்கி எறிந்து விட வேண்டும்.

இந்தப் பருத்திச் செடி சாதாரணமாக எட்டு முதல் 10 அடி வரை வளரும். மூன்று முதல் 5 ஆண்டுகள் தொடர்ந்து பலனளிக்கும்.

இது சித்திரை—வைகாசியில் ஒரு முறையும், புரட்டாசி முதல் கார்த்திகை வரை ஒரு முறையுமாக ஆண்டிற்கு இரு முறை பலனளிக்கும்.

கோடைப் பலன் அறுவடையானவுடன் கிளைகளை நறுக்கி விடலாம். இந்த நறுக்கின கிளைகளைக் கொண்டு கம்போஸ்ட் செய்யலாம்.

ஒரு செடியிலிருந்து ஆண்டிற்கு சுமார் $2\frac{1}{2}$ கிலோ பருத்தி கிடைக்கும். பஞ்சின் இழை நீளம் 1 அங்குலம். பருத்திக்கு பஞ்சு 30 சதம் கிடைக்கும். 50 எண் வரை நூல் நூற்கலாம்.

4. பருத்திப் பூச்சிகளை ஒழிக்கப் புதுமுறை.—பருத்தி விவசாயிகளுக்குப் பெருந்தொல்லை தருவது பருத்திச் செடியைத் தாக்கும் பல்வேறு பூச்சிகளே. பருத்திச் செடியின் முதல் மாத முடிவிலிருந்து மூன்று வாரத்திற்கு ஒரு முறையாக நான்கு தரம் 0·1 சத "கார்பரில்" மருந்தடித்தால், பருத்திச் செடியைத் தாக்கும் சகல பூச்சிகளிடமிருந்தும் நல்ல பாதுகாப்பு கிடைக்கிறது என்று சமீப காலத்திய சோதனைகள் நிரூபிக்கின்றன.

5. மண் அரிப்புத் தடுப்புக் கரைகளைக் காக்கப் புற்களை நடுவீர்.—மழை காலம் ஆரம்பமாகிவிட்டது. மண் அரிப்பைத் தடுப்பதற்காகப் போட்ட கரைகள் பாதுகாக்கப்பட வேண்டிய காலம் இது.

அக்கரைகளை நல்ல முறையிலும் சுலபமாகவும் குறைந்த செலவிலும் காக்கும் வழி, கரைகள் மீது புற்களை நட்டுப் பாதுகாப்பதே. புற்கள் நடப்பட்ட கரைகள் நீண்ட நாள் நிற்கின்றன.

புற்களை விதைகள் மூலமாகவோ, நாற்றுகள் மூலமாகவோ, வேர்த்துண்டுகள் மூலமாகவோ பயிரிடலாம்.

மாரிக்கால ஆரம்பத்தில் கரைகளில் 1 அடி இடைவெளியில் நீட்டு வாக்கில் அரை அங்குல ஆழத்தில் விதைகளைப் போட்டு மண்ணால் மூடினால் போதும். அல்லது விதைகளை நாற்றுவிட்டுப் பிடுங்கியும் 1 அடி இடைவெளியில் பரவலாக நடலாம். அல்லது வேருடன் கூடிய புல் துண்டுகளையும் கரைகளின் மீது நேரடியாக நடலாம்.

புற்களோடு போட்டியிட்டு வளரும் களைகளைக் களைந்தெறியவும்.

புற்கள் பரவலாகப் படர ஓரிரு முறை வெட்டியும் விடலாம்.

மூன்று நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு காலி இடங்களில் திரும்பவும் விதைக்கவும்.

பவானிசாகர் வட்டாரத்திற்கு கொளுக்கட்டைப்புல் சிறந்தது என்று அறிவிக்கப்படுகிறது.

விஞ்ஞான விவசாயம்

உ. இராமநாதன், பி. எஸ்ஸி. (விவ), பருத்தி
[உதவியாளர், மாநில பருத்தி அபிவிருத்தி
அலுவலகம், கோவை.]

போற்றி என்றும் கழனியெல்லாம்
பொன் வளமாக்கப் பயிரிடுவோம்;
ஏற்ற முறவே எந்நாளும்
இரும்புக் கலப்பை பூட்டிடுவோம்.

மாற்றுப் பயிர்கள் செய்தென்றும்
மண்ணின் வளத்தைக் காத்திடுவோம்;
வேற்றுமை சற்று மில்லாமல்
வென்றி நிலவ உழைத்திடுவோம்.

பயிரின் தரத்தை ஆய்ந்தறிந்து
பக்குவ மாக எருவிடுவோம்;
உயரும் வாழ்வின் நிலையோங்க
உற்பத் தியைப் பெருக்கிடுவோம்.

பொறுக்கு விதைகளைத் தெரிந்தெடுப்போம்
பூஞ்சண மருந்தில் கலந்தெடுப்போம்;
குறுக்கும் பயிரின் நோயொழிப்போம்
குன்றாய் விளைச்சல் குவித்திடுவோம்.

பூச்சி களினால் வருந்தீங்கைப்
பூராவும் போக்க வழிகாண்போம்;
காச்சும் நோயைக் கணக்கிட்டு
கருத்தாய்ப் பயிரைக் காத்திடுவோம்.

காலா காலம் அறுவடையைக்
கருத்தாய் கண்டு களித்திடுவோம்;
கால தேவன் அருள் வேண்டி
கரங்கள் கூப்பித் தொழுதிடுவோம்.

தன்னிறைவு தனைப் பெற்றிடுவோம்
தரணி போற்ற வாழ்ந்திடுவோம்;
அன்னிய நாட்டிற் குணவளிப்போம்
அன்பு பூண்டு வாழ்ந்திடுவோம்.

ஸ்டார் பிராண்டு

FERTILISERS STAR BRAND SHAW WALLACE & CO. LTD.

உரங்களே உங்கள்
சிறந்த முதலீடு

SHAW WALLACE

ஷா வாலஸ் & கம்பெனி லிமிடெட்
தபால் பெட்டி எண்: 14, சென்னை-1.

SHB3/SW/F/2 A-TAM

நெற்பயிரில் "ஆனைக் கொம்பனை"த் தடுக்க நூதன பூச்சி மருந்துகள்

[சி. இராமகிருஷ்ணன், B. Sc. (Ag)., D. H., & வ. ஜெயராமன், M. Sc.,
மண்டல ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை]

தஞ்சை மாவட்டத்தில் சம்பா, தாளடி நெற்பயிரைத் தாக்கி அதிக சேதம் விளைவிக்கும் பூச்சிகளில் "ஆனைக் கொம்பனும்" ஒன்றாகும். இது தாக்குவதால் பயிரில் கொம்பு போன்ற தூறுகள் ஏற்படுகின்றன. இதனால் அத்தூறில் விளைய வேண்டிய நெற்கதிர்கள் இழக்கப் படுகின்றன. இக் கொம்புகள் வெண்மை நிறத்தில் குழாய் போன்ற அமைப்பு உடையனவாய் இருக்கின்றன. இவ்விதக் கொம்புகள் ஏற்படக் காரணம் ஒரு வகை ஈயேயாகும். இதை ஆங்கிலத்தில் Pachydiplosis oryzae W. (gallfly) என்று கூறுவர்.

இந்த ஈக்கள், நெற்பயிரின் அடிப்பாகத்தில் முட்டைகள் இடுகின்றன. முட்டையிலிருந்து வெளிவந்த புழு (Maggot) பயிரின் தூறினைத் துளைத்துக்கொண்டு உள்ளே சென்று நடுக்குருத்தை, அது இளம்பும் இடத்திலேயே சாப்பிட்டு விடுவதால் அக்குருத்து நீண்டு "வெண்குழல்" (Silver shoot) வடிவமாகி விடுகிறது. இதையே பொதுவாக விவசாயிகள் "ஆனைக் கொம்பன்" என்று அழைக்கிறார்கள்.

வாழ்க்கைவரலாறு:—பொதுவாகபெண் ஈக்கள் இப்பகுதிகளில் 100க்கு மேலாக முட்டைகளை இடுகின்றன. இவைகள் பெரும்பாலும் இலைத்தோகைகளில் காணப்படுகின்றன. இதன் வாழ்க்கைச் சரிதம் 2 முதல் 3 வாரகாலம் ஆகும்.

சேதம்:—தஞ்சை மாவட்டத்தில் இப்பூச்சி, அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில்தான் சம்பா, தாளடிப் பயிர்களில் காணப்படுகின்றது. மற்ற காலங்களில் சில வகை புற்களில் காணப்படுகின்றன. பொதுவாக தாளடிப் பயிரான ஏ.டி.டி. 24-லும், கோ. 30-லும் "ஆனைக் கொம்பன்" மூலம் அதிக சேதம் ஏற்படுகிறது.

தடுப்பு முறை:—ஆடுதுறை மண்டல ஆராய்ச்சிப் பண்ணையில் 1962-63 தாளடிப் பயிரிலும், 1963-64 சம்பா பயிரிலும் நவீன பூச்சிக்கொல்லி மருந்துகளால் இப்பூச்சியைத் தடுக்கும் முறைகள் பற்றிய பரிசோதனை செய்யப்பட்டது. தாளடிப் பயிரில் நான்கு வகையான மருந்துகளும், சம்பா பயிரில் ஒன்பது விதமான மருந்துகளும் உபயோகப்படுத்தப்பட்டன.

எல்லா மருந்தடிக்கப்பட்ட பாத்திகளிலும் "ஆனைக் கொம்பன்" குறைவாகவும் மருந்தடிக்கப்படாத பாத்திகளில் மிக அதிகமாகவும் காணப்பட்டன.

கார்பரிலும், பாரதியானும், என்ட்ரினைவிட அதிக மகசூல் கொடுத்திருப்பதிலும், விலை குறைவு காரணமாக என்ட்ரின் மற்றவற்றைவிட அதிக நிகர லாபம் கொடுத்திருக்கிறது.

தாளடிப் பயிரில் பரிசோதனையின் மூலமாக கிடைத்த மகசூலில் பாரதியான், என்ட்ரின் இரண்டும், மற்றெல்லாவற்றையும்விட முறையே 187 கிலோ, 180 கிலோ அதிக விளைவைக் கொடுத்திருக்கிறது. இவ்விரண்டிலும் மருந்தடித்த செலவு போக நிகர லாபம் முறையே ரூ 29.24ம், ரூ 36.56ம் ஆகும்.

சம்பா பயிரில் முக்கியமாக கார்பரில், பாரதியான் என்ட்ரின் அடித்த பாத்திகளில் முறையே 278 கிலோ, 245 கிலோ, 231 கிலோவும் அதிக மகசூல் கிடைத்துள்ளது. இவற்றின் நிகரலாபம் முறையே ரூ 29.60ம், ரூ 40.30ம், ரூ 48.23ம் ஆக கிடைத்தது.

எனவே என்ட்ரின் ($4\frac{1}{2}$ காலன் தண்ணீரில் 1 அவுன்ஸ்) பாரதியான் (50 சத நீர் கரைசல்—$6\frac{1}{4}$ காலன் தண்ணீரில் 1 அவுன்ஸ்) கார்பரில் (3 காலன் தண்ணீரில் 1 அவுன்ஸ்) போன்ற மருந்துகளில் ஏதாவதொன்றை நட்ட பயிரில் "ஆனைக் கொம்பன்" தென்பட்டவுடன் மூன்று வாரத்திற்கு ஒரு முறையாக 4 முறை தெளித்தால் ஆனைக் கொம்பனின் சேதம் தடுக்கப்பட்டு கூடுதலான விளைவு கிடைக்கும் என்பது திண்ணமாகும்.

சோள உற்பத்தியில் புதியதொரு சாதனை

1964—65 இறுதி மதிப்பீடு

இந்தியாவில் 1964—65-ல் மொத்தம் 4, 45, 09, 000 ஏக்கராவில் சோளம் சாகுபடி செய்யப்பட்டிருப்பதாகவும், மொத்தம் 98, 10, 500டன் சோளம் உற்பத்தியாகியிருப்பதாகவும், இந்த ஆண்டுக்கான அனைத்திந்திய இறுதி மதி பீட்டிலிருந்து தெரியவருகிறது. இந்த வருடச் சோள உற்பத்தியனது, இதற்கு முன்பு எப்போதுமே இருந்திராத அளவுக்குப் புதியதொரு சாதனையாகும்.

1963—64-ம் வருடத்துடன் ஒப்பிடும்போது, 1964—65-ம் வருடச்சோளப்பயிர் சாகுபடிப் பரப்பளவு 1,38,000 ஏக்கரா, அதாவது 0·3 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. இதேபோல் உற்பத்தியும் 6,76,000 டன், அதாவது 7.4 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

நாட்டின் மானம் காக்க மகசூல் பெருக்குங்கள்!

கொளுஞ்சி விதையில் பாக்டீரியாக் கரைசல் கலந்து விதைத்ததில் ஏற்பட்ட நன்மைகள்

(எஸ். முத்தையா நாடார், செவரக்கோட்டை, கல்லல் பஞ்சாயத்து யூனியன்)

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் கல்லல் வட்டாரத்தைச் சேர்ந்த செவரக்கோட்டை என்ற கிராமத்தைச் சேர்ந்தவன் நான். பொதுவாகக் கிழக்கு இராமநாதபுரம் மிகவும் வரட்சியான ஓர் பகுதி. இங்கு வேளாண்மை அவ்வளவு சிறப்புற நடைபெற வாய்ப்பில்லை. எனினும் அவ்வப்போது கிடைக்கும் மழையைக் கொண்டு இப்பகுதியிலுள்ள விவசாயிகள் தங்கள் தொழிலை நடத்தத் தவறுவதில்லை.

கல்லல் வட்டாரத்தில் மாதிரிப் பண்ணை வைத்து நடத்தும் விவசாயியாக எங்கள் பகுதிக்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அந்த மாதிரிப் பண்ணை 10 எக்கர் 5 செண்ட் விஸ்தீரணமுள்ளது. இதில் வேளாண்மைத் துறையினரால் அவ்வப்போது கூறப்படும் திருந்திய விவசாய சாகுபடி முறையை நான் கடைப்பிடித்துள்ளேன். அதிலே கொளுஞ்சியில் பாக்டீரியாக் கரைசல் கலந்து விதைத்தலும் ஒன்று. பாக்டீரியாக் கரைசல் கலந்த குடுவை ஒன்று எனக்கு பிப்ரவரி மாதம் 17–ம் தேதி வாங்கிக் கொடுக்கப்பட்டது. அதற்கு விலை ரூ. 2·50. அதை உபயோகிக்கும் முறையை எங்கள் பகுதி கிராமநல ஊழியர் மூலமாக நன்கு கேட்டுத் தெரிந்துகொண்டு அதன்படி பிப்ரவரி 24-ம் தேதி விதைத்தேன். சுமார் 50 செண்ட் நிலத்தில் 20 பவுண்டு கொளுஞ்சி விதை விதைத்தேன். விதைப்பு தினத்தன்று கல்லல் வட்டாரத்தைச் சேர்ந்த வேளாண்மை விரிவாக்க அலுவலரும், உரஉற்பத்தி ஆய்வாளரும், கிராமநல ஊழியரும் உடனிருந்தனர். அவர்கள் கூற்றுப்படியே கரைசல் கலவாத கொளுஞ்சியை ஒரு பகுதியிலும் கலந்த கொளுஞ்சியை மற்றொரு பகுதியிலும் விதைத்தேன். விதைத்த 15-ம் நாளன்றே கரைசல் கலந்த கொளுஞ்சி விதைத்த விதை ஒன்றும் பழுதில்லாது நன்கு முளைத்துவிட்டது. ஆனால் கரைசல் கலவாத பகுதியில் 25 நாட்களுக்குப் பிறகே முளைத்தும் அதிக இடைவெளி காணப்பட்டது. இதற்குக் காரணம் விதைகள் எல்லாம் முளைக்காததே. மேலும் வளர்ச்சியிலும் வேறுபாடுகள் காணப்பட்டது. கரைசல் கலந்த கொளுஞ்சியானது நன்கு படர்ந்து பசுமையுடன் காணப்பட்டது; கரைசல் கலவாதது அவ்வளவு வளர்ச்சியில்லை. விதைத்து சரியாக மூன்று மாதத்தில் கரைசல் கலந்த கொளுஞ்சி நன்ருகப் பூத்துக் காய்பிடிக்க ஆரம்பித்துவிட்டது. செடிகள் சுமார் 2 அடி உள்ளது. காய்களில் உள்ள விதைகளும் நன்கு உறுதியாகவும், திரட்சியாகவும் உள்ளது. ஆனால் கரைசல் கலவாத கொளுஞ்சி முக்கால் அடி உயரத்திலேயே பூக்க ஆரம்பித்து விட்டது. அதில் உள்ள காய்களும் விதைகளும் முதிர்ச்சியில்லை. வட்டார வளர்ச்சி அலுவலகத்திலுள்ள வேளாண்மைப் பிரிவைச் சேர்ந்த அத்தனை பேரும் எங்கள் பகுதி கிராம நல ஊழியரும் அடிக்கடி எனது பண்ணைக்கு வந்து இதிலுள்ள வேறுபாடுகளை எனக்கும் என் பகுதி விவசாயிகளுக்கும் எடுத்துக் கூறி வருவது எனக்குப் பெருமையாகவும், வரும் ஆண்டில் கரைசல் கலந்து தான் கொளுஞ்சி விதைக்கவேண்டும் என்ற எண்ணத்தையும் உண்டாக்கி இருக்கிறது. மேலும் வேர் முடிச்சுகள் கரைசல் கலந்த கொளுஞ்சியில் அதிகமாகக் காணப்படுகிறது. சுமார் 250 முடிச்சுகள் ஒவ்வொரு செடிக்கும் உள்ளன. ஆனுல் கரைசல் கலவாத கொளுஞ்சியில் வேர் முடிச்சுகள் காணப்படவில்லை. வேர் முடிச்சுகளில் தழைச்சத்துக்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன என்றும் அவைகளால் பயிர்கள் நன்கு செழித்து வளரும் எனவும் நான் எங்கள் வட்டார அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் மூலம் கேள்விப்பட்டேன். ஆதலால் நன்கு செழித்து அடர்ந்து படர்ந்து வளர்ந்துள்ள கொளுஞ்சியை அப்படியே மடக்கி உழுதுவிடவும் நான் தீர்மானித்துள்ளேன். இதனுல் நிலமும் நன்கு பண்படும் என்று விவசாய அதிகாரி அவர்கள் கூறினுர்கள். மொத்தத்தில் ஒரு சிறு பாக்டீரியாக் கரைசல் குடுவையினுல் எவ்வளவு நன்மைகள் உள்ளது என்று பாருங்கள். விவசாயத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் ஒத்துழைப்பினுலும் ஓயாத தூண்டுதலினுலும் எனது பண்ணையைச் சுற்றிலும் கிளைரிசெடியா, ஐபோமியா முதலிய செடிகளை நட்டுப் பயிராக்கி இருக்கிறேன். அதன் தழையைக் கொண்டு மக்கிய உரம் தயாரிப்பதனையும் உர உற்பத்தி ஆய்வாளரின் மூலம், நன்கு தெரிந்து கொண்டுள்ளேன். வரும் நாட்களில் நன்கு உரமிட்டு திருந்திய விவசாய முறைப்படியே சாகுபடி செய்து எங்கள் பகுதியின் நிலத்தின் தகுதியை ஓரளவுக்கு உயர்த்துவேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

ஆதலால் இதைப் படிக்கும் விவசாயப் பெருமக்கள் யாவரும் தீவிர விவசாயத் திட்டத்தில் பங்கு கொண்டு நம் நாடு செழிக்க உறு துணை புரிவீர்கள் என உங்களை வேண்டுகிறேன்.

தமிழ் நாட்டில் கச்சாப்பருத்தி உற்பத்தி அதிகரிக்க தீவிர சாகுபடி திட்டம்

தமிழ்நாட்டில் கச்சா பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்காக அமுல்படுத்தப்படும் தீவிர பருத்தி சாகுபடித் திட்டத்தினை 1965 செப்டம்பர் 1-ம் தேதி முதல் 1966 மார்ச்சு 31–ம் தேதிவரை மேற்கொண்டு எழு மாதங்களுக்குத் தொடர்ந்து நடத்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அதற்காகம் சுமார் ரூ 1, 20, 084 செலவிடவும் அரசாங்க அனுமதித்திருக்கிறது.

"நில வளத்தைப்
பாதுகாக்க"

பயிர்களால் எடுத்துக் கொள்ளப்படும்
உணவு சத்துக்களை திரும்பவும்
அளிக்க வேண்டும்.

பயிர்களுக்கு அதிகம் நைட்ரஜன்
உரம் மட்டும் உபயோகிப்பதினால்
மண்ணிலிருக்கும் மற்ற சத்துக்கள்
- முக்கியமாக பொட்டாஷ் - வேகமாக
வெளியேற்றப்படுகிறது.
இதனால் நிலத்தின் வளம் குறைகிறது.

உங்கள் நிலத்திலிருந்து அதிக
விளைச்சல் கிடைக்க வேண்டுமாயின்,
நீங்கள் உரமிடும்போது தவறாமல்

பொட்டாஷ்

சேர்க்க
மறந்து விடாதீர்கள்

பயிர்களுக்கு உரமிடுவது சம்பந்தமான இலவச விவரங்கள்,
புத்தகங்கள் மற்றும் ஆலோசனை கிடைக்குமிடம்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜன்ஸி லிமிடெட்
8/9, தம்புசெட்டி தெரு, சென்னை-1

IP.G.23 T

கேள்வியும் பதிலும்

விஸ்தரிப்பு பகுதி

[விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் "மேழிச்செல்வம் கேள்வியும் பதிலும்" விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயம்புத்தூர்-3" என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.]

ச. சுப்பையன், முறம்புக்காடு, வடுகம் அஞ்சல், இராசிபுரம் வட்டம்.

கேள்வி: விவசாய நவீன முறைகளை அறிய சிறந்த பத்திரிகை ஏதேனும் உண்டா? இருப்பின் அதன் முழு விலாசம் அறிவிக்கும்படி, பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பதில்: விவசாய நவீன முறைகளை அறிய சிறந்த பத்திரிகை விவசாய இலாகாவினரால் மாதந் தோறும் வெளியிடப்படும் "**மேழிச் செல்வம்**" என்பதாகும்.

மேழிச்செல்வம் விவசாயிகளுக்கென பிரசுரிக்கப்படும் பத்திரிகை. உங்கள் மகசூலை கணிசமான அளவு அதிகரிக்கும் முறைகளை, எளிய நடையில் அழகிய படங்களுடன் எடுத்துரைக்கிறது. உங்களுக்கென அரசாங்கம் செய்யும் வதிகள் இதில் வெளியாகின்றன.

ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 கட்டி சந்தாதாரராகி விட்டால் மாதம் ஒருமுறை வீதம் ஓராண்டு முழுவதும் உங்களுக்கு மேழிச் செல்வம் தபாலில் அனுப்பப்படும். இப் பணத்தை உங்கள் வட்டார விவசாய விஸ்தரிப்பு அலுவலரிடம் செலுத்தி ரசீது பெறவும்.

ஏ.எஸ். வெங்கட்டராவ், ஹனுமந்தபுரம், அன்னியூர் அஞ்சல் (வழி) விழுப்புரம்.

கே: ".·.பெர்ரஸ் சல்பேட்" என்பதற்கும் "∴பெர்ரிக் சல்பேட்" என்பதற்கும் என்ன வித்தியாசம்? ஒவ்வொன்றிலுமுள்ள பயிருணவு சத்துக்களின் அளவு என்ன? 2. களர் (அ) உவர் நிலங்களில் .·.பெர்ரிக் சல்பேட் உரமிட்டு சாகுபடி செய்வதால் நல்ல விளைவு காண்பதோடு நிலவகையும் மாறு படுவதாக அமெரிக்க ஆய்வுக்கூடங்களில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. நம் நாட்டில் இவ்வகையில் பரிசீலனை செய்யப்பட்டுள்ளதா? எங்கு? எப்பொழுது? அதன் முடிவுகள் என்ன? நல்ல நிலங்களில் கூட .·.பெர்ரிக சல்பேட் உர மாகப் போட்டால் அதிக மகசூல் காண்பதாக கூறப்படுகிறது. அம்மாதிரி சோதனைகள் நம் நாட்டில் செய்யப்பட்டுள்ளதா? எவ்வளவு (ஒரு எக்கருக்கு) போட வேண்டும்?

ப: இரும்பு தனது உப்புகளில் இரண்டு ஆக்ஸிகரண நிலையில் உள்ளது. கீழ் ஆக்ஸிகரண நிலையில் உள்ள உப்பை .·.பெர்ரஸ் என்றும், மேல் ஆக்ஸிகரண நிலையில் உள்ளதை .·.பெர்ரிக் என்றும் கூறப்படும். ஆகையால், இரும்பு இரண்டு விதநிலையிலும் உப்புகளாகும். அவ்விரண்டு நிலை களும் ஒன்றுக்கொன்று மாறவும் செய்யும். இந்த இரண்டு உப்புக்களில் .·.பெர்ரஸ் சல்பேட்டில் சுமார் 37 சதமும், ∴பெர்ரிக் சல்பேட்டில் சுமார் 33 சத வீத மும் அயன் (இரும்பு) சத்து அடங்கியுள்ளது. ஆகவே நிலங்களுக்கு .·.பெர்ரஸ் சல்பேட் அல்லது .·.பெர்ரஸ் அம்மோனியம் சல்பேட்தான் உகந்தது. .·.பெர்ரிக் சல்பேட் நிலங்களுக்கு சிபாரிசு செய்யப் படுவது இல்லை.

2. களர் நிலங்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.
(அ) சுண்ணாம்புக்கல் அல்லது ஜிப்ஸம் உள்ள களர்மண்.
(ஆ) சுண்ணாம்பு சத்தில்லாத களர்மண்.

முதல் சொன்ன களர் நிலங்களில் அமிலத் தன்மை யுடைய எந்த பொருட்களை மண்ணில் சேர்த்தாலும், அந்த அமிலத் தன்மையால் சுண்ணாம்புச் சத்து நீரில் அதிகமாகக் கரைந்து களரைச் சீர்திருத்த உதவும். .·.பெர்ரஸ் சல்பேட், ∴பெர்ரிக் சல்பேட், சல்பர், கால்சியம் சல்பேட், அலுமினியம் சல்பேட் இவை மண்ணில் அமிலத் தன்மையை அதிகப்படுத்தும். இந்த முடிவுகள் பல நாடுகளில் பல வருட ஆராய்ச்சிகளின் முடிவுகள் ஆகும். ஆனாலும் ·.·பெர்ரஸ் சல்பேட் .·.பெர்ரிக் சல்பேட் முதலி யவை உபயோகிப்பதால் சீர்திருத்தச் செலவு அதிக மாவதாலும் லாபகரமானதல்ல என்பதாலும் பொதுவாக சிபாரிசு செய்வதில்லை. மேற்சொன்ன நிலங்களுக்குத் தக்கைப் பூண்டு போன்ற பசுந்தாள் உரப் பயிரை உபயோகித்து, அதை நிலத்தில் உழுது

மக்கச் செய்தால், மக்கும்போது உண்டாகும் அங்கக அமிலங்களால் (organic acids) சுண்ணும்புச் சத்துக் கரைந்து நிலத்தை சீர்திருத்த உதவி செய்யும்.

இரண்டவதாகச் சொன்ன சுண்ணும்புச் சத்தில்லாத களர் நிலங்களைச் சீர்திருத்த ஜிப்ஸம் போன்ற கால்ஷிய உப்புகளை உபயோகப்படுத்தித்தான் ஆகவேண்டும்.

3. இரும்பு சத்து பொதுவாக எல்லா பூமிகளிலும் அதிக அளவில் இருக்கும். பயிர்களுக்கு இரும்பு, என். பி.கே. (N.P.K.) போன்று அதிக அளவில் தேவை யில்லாமல் போனுலும் அது மிகச் சிறிய அளவில் பயிர்களுக்குத் தேவை. களர் மண்ணிலும், உவர் நிலங்களிலும் சில சுண்ணும்புச் சத்து அதிகமுள்ள நிலங்களிலும் பயிர்களுக்குத் தேவையான இரும்புச் சத்து இருந்தும் பயிர்களுக்குக் குறைவாகக் கிடைக் கக்கூடும். ஆகையால் அவ்வித இடங்களில் ∴பெர்ரஸ் சல்பேட் போட்டால் மகசூல் அதிகமாக கிடைக் கலாம். ஆனுல் இவற்றைக் கவனமாக உபயோகித்தல் வேண்டும். சிறிது அதிக அளவு போனுலும் அவை மகசூலைக் குறைத்துவிடும். ஏனெனில் இரும்பு சத்து சிறிய அளவிலெயே பயிர்களுக்கு நன்மை செய்யும். பொதுவாக, ஏக்கருக்கு 45 முதல் 50 ராத்தல் வரை மண்ணிலும், 5 ராத்தலை 40 முதல் 80 காலன் தண்ணீரில் கரைத்து ஸ்பிரே (spray) செய்வதும் உண்டு. ஆனுல் நம் மாகாணத்தில் இக்குறைபாடு இருப்பதாக தெரிய வில்லை.

இரும்பு முதலிய சிறிய அளவில் தேவைப்படும் மூலகங்களின் தேவையை அறிய, நமது ராஜ்ஜியத்தில் உள்ள மண் வகைகளில் உள்ள அளவை அறியத் தனியாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகையால் மண்ணில் அவற்றின் அளவு தெரியாமல், அவற்றை உபயோகிப்பது நேர்மாறுன பலனைக் கொடுக் கலாம். ∴பெர்ரஸ் சல்பேட் உபயோகிக்கும்போது மிகக் கவனமாக இருத்தல் வேண்டும்.

கே: கிணற்றுத் தண்ணீரை பரிசோதனை செய்ய வேண்டு மானுல் எங்கு அனுப்ப வேண்டும்? கட்டணம் உண்டா? எப்படி அனுப்பவேண்டும்?

ப: நமது ராஜ்ஜியத்தில் உள்ள மண் பரிசோதனை நிலை யங்களால் கிணற்று நீரை பாசனத்திற்கு உகந்ததா இல்லையா என்பதை தண்ணீர் மாதிரி அனுப்பி இலவச ஆலோசனை பெறலாம். தண்ணீர் மாதிரி எடுக்கும் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பரிசோதனைக்காக தண்ணீர் மாதிரி எடுக்கும் முறை.

மாதிரி எடுக்க வேண்டிய தண்ணீரை 24 அவுன்ஸ் பாட்டிலில் 2, 3 முறை விட்டு நன்ருக குலுக்கி, கொட்டி விடவும்.

பம்ப் மூலம் வருகின்ற தண்ணீரை மாதிரி எடுக்க வேண்டியிருந்தால், சுமார் 15 நிமிட நேரம் பம்ப் மூலம் தண்ணீர் வெளியேற விட்டுவிடுங்கள். அதன் பின்னர் மாதிரிக்கான தண்ணீரைப் பிடிக்கவும். கபிலை மூலம் தண்ணீர் எடுக்க வேண்டியிருந்தால், ஒரு மணி நேரம் கபிலை இறைத்ததற்கு பின்னரே தண்ணீர் மாதிரி எடுக்கவேண்டும்.

தண்ணீர் மாதிரியுடன் கீழ்கண்ட விபரங்களும் அனுப்பப்படவேண்டும்.

(1) சொந்தக்காரரின் பெயர்:

(2) கிணறு இருக்குமிடம்:—

(1) கிராமம்

(2) தாலுகா

(3) நீர் மாதிரி எடுத்தவரின் பெயரும் தொழி லும்.

கே: நுண் உணவுகள் இந்தியாவில் தயாரிக்கப்படு கிறதா? தயாரிப்பாளர்களின் விலாசம் என்ன?

ப: நுண் உணவாக உபயோகிக்கப்படும் இரசாயனப் பொருள்களான மயில் துத்தம் (காப்பர் சல்பேட்

பேச்சிலும், மூச்சிலும், செயலிலும்
நாம் யாவரும் ஒன்றே
யாவரும் இந்திய மக்களே.
DA-65/F2

ஜிங்க் சல்பேட்டு, போராக்ச் போன்றவை கீழ்கண்ட முகவரிகளில் கிடைக்கின்றன.

(1) பிரீ இந்தியா சைன்டிபிக் சப்ளையர்ஸ், சென்னை–15.

(2) பி.எம். ஷா அண்டு கம்பெனி, பம்பாய்.

(3) பெங்கால் சைன்டிபிக் அண்டு கெமிகல் சப்ளையர்ஸ், கல்கத்தா–9.

இது சம்பந்தமான மற்ற விபரங்களுக்கு விவசாய செய்தி அலுவலர், சென்னை–2 என்ற முகவரிக்கு எழுதவும்.

வை. விஸ்வநாதன், சோழபுரம் அஞ்சல், குடந்தை வழி, தஞ்சை மாவட்டம்.

கே: தாங்கள் எங்கள் இளம் விவசாயிகள் மன்றம் விரும்பும் விபரங்களையும் தேவைகளையும் எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி அவ்வப்போது அறிவித்துத் தேவையான உதவிகளையும் செய்த தங்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்கள் மூலம் நாங்கள் அடையப்பெற்ற "திராட்சை சாகுபடிக் குறிப்புகள்" மிகவும் பயனுள்ளதாக இருந்தது. எங்களது மன்றத்தின் அங்கத்தினர்களுக்கு வழிகாட்டியாக நானே முதன் முதலில் திராட்சை சாகுபடி செய்ய (முதலில் சோதனைக்காக) நிலம் ஒதுக்கியுள்ளேன். ஆனால் அந்நிலத்தில் பயிரின் விரோதிகளான கோரைப் புற்களும், அருகம்புல்லும் நிறைந்துள்ளது. மேற்கண்ட களைகளை ஒழிக்க சாதாரணமாகக் களைக்கொத்துதல் அல்லாமல் இரசாயனக் கொல்லி மூலமும் ஒழிக்கலாம் என்பதை அறிவேன். அவைகளின் பெயரென்ன? ஏக்கருக்குத் தேவையான அளவும் விலையும் என்ன? அம்மருந்துகளை எங்கள் வட்டத்தைச் சேர்ந்த எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் மூலம் பெறமுடியுமா? அல்லது தங்கள் ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் பெறவேண்டுமா? என்பன போன்ற விபரங்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் கோரைப் புற்கள மட்டும் நிறைந்துள்ள நிலத்தில் அதற்குரிய ரசாயனக் களைக் கொல்லியால் ஒழித்த பிறகு அந்நிலத்தில் கத்திரி, தக்காளி, மிளகாய், வெண்டை, மொச்சை, முட்டை கோஸ் போன்ற பயிர்களை சாகுபடி செய்யலாமா? அப்படி செய்தால் பயிர்களுக்குத் தீமை ஏற்படுமா? என்ற விபரங்களையும் தெரிவிக்கக் கோருகிறேன். மற்றும் களைக்கொல்லிகளை உபயோகிக்கும் முறைகளையும், அவைகளுடைய சக்தி எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

பதில்: அருகு மற்றும் கோரைப்புல் களைகளை ஒழிக்கும் முறைகள் பற்றியும் களைக்கொல்லிகளைப் பயன்படுத்தும் வழிகள், கிடைக்கும் இடம், தயாரிப்பாளர்களின் பெயர்கள், விலை முதலிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அருகு மற்றும் கோரையைக் களை கொல்லிகளால் அழிக்கும் முறை.

பயிரை அழிக்கும் களைகளில் மிகவும் வேகமாகப் பரவக் கூடியதும், தடுப்பு முறைகளுக்கு ஈடுகொடுக்காததும் அருகம் புல்லும், கோரைப் புல்லும் ஆகும். இவை விதை மட்டுமின்றி பூமிக்கடியில் படர்ந்துள்ள கிழங்குகள் (கோரைப் புல்), மற்றும் தண்டுகள் மூலம் வேகமாகப் பரவுகின்றன. ஆகவே இவற்றைப் பூண்டோடு ஒழிப்பதென்பது கடினம். ஆயினும் களைக்கொல்லி மருந்துகள் மற்றும் சாதாரணமான களையெடுப்பு முறைகள் இவ்விரண்டையும் கைக்கொண்டு நாளாவட்டத்தில் நிரந்தரமாக அழிக்க வழியுண்டு.

களைகள் பரவாமல் தடுப்பதைவிட களைகளை அழிக்கச் சிறந்த வழி எதுவும் இல்லை. முக்கியமாக கீழ்க்கண்ட முறைகளை அனுசரித்து களைகள் பரவாமல் தடுக்கலாம்.

1. சுத்தமான விதை விதைப்பதும், நன்றாக மக்கின தொழு உரமும் முதற்கண் நோக்கவேண்டியவை.

2. வேளாண் கருவிகள் துப்புரவாக இருப்பதுடன் களைகள் மிகுந்த இடத்திலிருந்து மண்ணைக் கொண்டு வந்து மற்ற நிலங்களில் போடுவதைத் தவிர்க்க வேண்டும்.

3. கோடைக்காலத்தில் நிலத்தை உழுது, களைகளின் பூண்டுகள் முதலானவற்றை பூமி மட்டத்துக்குமேல் கொண்டு வருவதால், அவை வெயிலில் காய்ந்து, மறுபடியும் முளைக்காதவாறு பட்டுப்போய்விடும்.

4. களை வெட்டியவுடன் அவற்றைக் கொளுத்திவிடுவது மிகவும் சிறந்தது.

5. மேலும், வயலில் தண்ணீர் கட்ட வசதியிருப்பின், தண்ணீரைத் தேங்க வைத்து, நிலமட்டத்திற்கடியில் இருக்கும் கிழங்கு, தண்டுகளை அழுகச் செய்து, களைகள் பரவுவதைத் தடுக்கலாம்.

6. கினிப்புல், நீரடிப்புல் போன்ற பயிர்கள் அதிவேகமாக வளர்ந்து களைகளை வளரவிடாமல் தடுப்பதால் இவற்றைப் பயிரிடலாம்.

இரசாயன முறையில் அழிக்கும் முறை

தற்போது கிடைக்கும் களை கொல்லிகளில் "டௌபான்" என்ற மருந்து புல் வகையைச் சார்ந்த கோரை மற்றும் அருகம் புல்லை ஓரளவுக்குத் திருப்திகரமாக அழிக்கிறது. இம்மருந்துகள் செடிகளை அழிக்கும் தன்மை வாய்ந்தவையாதலால் அவற்றை மிகவும் கவனமாகக் கையாளுதல் அவசியம். மற்றும், இந்த இரசாயன முறை நல்ல பலனை அளிக்கவேண்டுமானால் இதனுடன் மற்ற வழிகளில் களையைப் போக்கும் முறைகளையும் பின்பற்றுவதுதான் சாலச் சிறந்தது.

மருந்தை தெளிக்கும் முறைகள்

ஏக்கருக்கு 4-5 கிலோகிராம் எடையுள்ள (டௌபானை) 10 முதல் 13 வாளி (அல்லது குடம்) தண்ணீரில்

கலந்து, களைக்கொல்லியை மட்டும் தெளிப்பதற்கான தனி ஸ்ப்ரேயரில் தெளிக்க வேண்டும்.

தரிசு நிலங்களில் மட்டுமே இதைக் கையாள வேண்டும். ஏனெனில் எப்பயிரையும் முக்கியமாக பருத்தி, புகையிலை, தானியங்கள் இவற்றை இம்மருந்து அழித்து விடும்.

தவிரவும், மழை நாட்களில், காற்றின் சலனம் இவற்ருல் மருந்தின் வீரியம் பாதிக்கப்படுவதுடன், மற்ற அண்டை வயலிலுள்ள பயிர்களுக்கும் சேதம் ஏற்படுமாகையால் நல்ல வெயில் நாட்களில், காலை அல்லது மாலை வேளைகளில் காற்றில்லாத நேரத்தில் மருந்தைத் தெளிக்க வேண்டும்.

களைகள் சிறு செடிளாக இருக்கும்போது தெளிப்பது மிகவும் பலன் தரும். மருந்தைச் சீராகத் தெளிப்பதுடன், சரியான அளவு, மற்றுமுள்ள முறைகளை அனுசரிப்பது மிகவும் வலியுறுத்தப்படுகிறது.

இம்மருந்து மனிதனுக்கோ, கால்நடைக்கோ உயிருக்கு ஆபத்து உண்டாக்காவிடினும், மருந்தைத் தெளித்தவுடன், கை கால்களையும் உடலையும் சுத்தம் செய்து கொள்ளுவது மிகவும் நல்லது.

எல்லாவற்றிற்கும் மேலாக, செடிகளைக் கொல்லும் இம் மருந்தால் பயிருக்கு எந்த ஆபத்தும் நேராது கையாளுவது மிகவும் கவனிக்க வேண்டியது. மருந்து தெளித்த 10-15 நாட்களில், நிலத்தில் பயிரிடுவதால் அடுத்து வரும் பயிர்கள் பாதிக்கப்படமாட்டா.

மருந்து கிடைக்குமிடம் மற்றும் விலை விபரம்

"டௌபான்" தயாரிப்பவர்கள் வெவ்வேறு பெயர்களில் அதை விற்பனை செய்வதால் தயாரிப்பாளர்கள் கொடுத்த பெயருடன் விலை விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

தயாரிப்பாளர்களின் விற்பனை பெயர்	தயாரிப்பாளர்	கிலோ கிராம் விலை
"டௌபான்"	இம்பீரியல் கெமிக்கல் இன்ட்ஸ்ரீஸ், தபால் பெட்டி 130, சென்னை 1.	ரூ. 18-00
"டாபாபான்"	டாடா பைசன் கம்பெனி தபால் பெட்டி 36. வில்லிங்டன் தீவு, கொச்சி-3.	ரூ. 18-50
"டாலாபான்"	பூட்ஸ் ப்யூர் டிரக் கம்பெனி, 17, நிக்கோல் ரோடு, பம்பாய்-1.	ரூ. 16-00

குறிப்பு : மேலும் ஏதாவது விபரம் தேவையானல், தாவர நிபுணர், வேளாண்மைக் கல்லூரி, கோவை-3., என்ற முகவரிக்கு எழுதவும்.

'காய்கறித் தோட்டப் போட்டி' பரிசளிப்பு விழா.

சென்னை நகர காய்கறி அபிவிருத்திக் குழுவினரால் நடத்தப்பட்ட 'காய்கறித் தோட்டப் போட்டியில்' வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் விழா 'அவ்வை இல்லத்தில்' 29—9—65 அன்று நடைப்பெற்றது. விவசாயத் துறை நெறியாளர் திரு. கே. வி. ராமநாதன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். திருமதி மந்தா கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்திஞர். விவசாய அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள் தற்போதுள்ள அவசர நிலைமையில் காய்கறி உற்பத்தி பெருக வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திப் பேசி, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கிஞர்.

பரிசு பெற்ருேர் விவரம்

முதற் பகுதி (100 முதல் 250 சதுர அடி பரப்புள்ள தோட்டங்கள்).

முதற் பரிசு—திரு. சுப்பராயலு, 19, 4-வது மெயின் ரோட், ராஜா அண்ணுமலைபுரம், சென்னை.

இரண்டாவது பரிசு—திருமதி யூசுப் மூஸ்வீ. 23/பி, கிரீன்ஸ் சந்து, தேனும்பேட்டை, சென்னை.

மூன்ருவது **பரிசு**—திருமதி அனந்தபத்மநாபன், 98, ராமகிருஷ்ண நகர், மந்தவெளி, சென்னை.

இரண்டாம் பகுதி (250 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்புள்ள தோட்டங்கள்).

முதற் பரிசு—திரு. வி. ஆர். எஸ். பாண்டியன், 3, முதல் மெயின் ரோட், ராசா அண்ணுமலைபுரம், சென்னை.

இரண்டாம் பரிசு—தி ந. பீம்சிங், 1/ஏ, முர்ரேய்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, சென்னை.

மூன்ரும் பரிசு—திருமதி டேவிட், 97, சீதம்மா காலனி, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை.

மூன்ரும் பகுதி (கல்லூரிகள்.)

முதற் பரிசு—மேரி ராணிக் கல்லூரி, சென்னை.

இரண்டாம் பரிசு—லயோலா கல்லூரி (ஆஸ்டல்), சென்னை-37.

நான்காம் பகுதி (உயர்நிலைப் பள்ளிகள்).

முதற் பரிசு—சங்கரலிங்க நாடரர் உயர்நிலைப் பள்ளி, தண்டையார்பேட்டை, சென்னை.

இரண்டாம் பரிசு—அவ்வை இல்லம், அடையாறு, சென்னை.

மூன்ரும் பரிசு—சிசு நல இல்லம், சென்னை-13.

ஐந்தாம் பகுதி (ஆரம்பப் பள்ளிகள்).

முதற் பரிசு—வித்தியாபாரதி, சென்னை-14.

இரண்டாம் பரிசு—பாலவிஹார், கீழ்ப்பாக்கம், சென்னை-10.

ஆரும் பகுதி (பிற நிறுவனங்கள்)

முதற் பரிசு—கல்வித்துறை நெறியாளர் சென்னை-6.

இரண்டாம் பரிசு—விஜ்யா தோட்டம், கோடம்பாக்கம், சென்னை.

மூன்ரும் பரிசு—ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-4.

பயிருக்கு உரம் போருக்கு வீரம் போன்றது.

வெண்டைச் செடியில் நோய்கள்

[கா சிவப்பிரகாசம், பி.எஸ்ஸி, (வேளாண்மை), எச். டி. லெவின், எம். எஸ்ஸி (வேளாண்மை), சி. எஸ். கிருஷ்ண மூர்த்தி, பி. எஸ்ஸி (வேளாண்மை), பூசண இயற் பிரிவு, வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், கோவை-3]

மக்களின் நல் வாழ்விற்கு சத்துணவைத் தரும் காய்கறிகள் இன்றியமையாதவையாகும். குறுகிய காலத்தில் நிறைந்த பலன் தரக்கூடிய காய்கறிகளைப் பயிரிடும்போது அவற்றின் மூலம் எதிர்பார்க்கும் வருமானத்தைப் பெறவேண்டுமாயின், உரிய காலத்தில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

சாம்பல் நோய், இலைப்புள்ளி நோய் போன்ற பூசண நோய்களாலும் நரம்பு வெளுக்கும் 'மொசாய்க் பிணி' என்னும் வைரசு நோயாலும் வெண்டைச் செடிகள் பாதிக்கப்படுகின்றன.

1. சாம்பல் நோய்: (Powdery mildew) இந்நோயின் தாக்குதலால் இலைகளில் வெண்ணிறப் படிவுகள் தோன்றுகின்றன. ஆரம்பத்தில் சிறு சிறு பகுதிகளாகத் தாக்கப்பட்டு நாளடைவில் இவை ஒன்றோடொன்று இணைந்து இலையின் முழுப் பாகத்திற்கும் பரவிவிடுகின்றன. இறுதியில் பாதிக்கப்பட்ட இலைகள் யாவும் காய்ந்து உதிர்ந்து



சாம்பல் நோய்

விடுகின்றன. கால நிலை தோதாக இருந்தால் இந்நோயினால் வெண்டைச் செடி மிகுந்த சேதத்திற்குள்ளாகிறது. பெரும்பாலும் செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் வரை இந்நோய் காணப்படும்.

தடுப்பு முறை:—கந்தகத்தூளை (Sulphur dust) இலைகளில் தூவி இந்நோயைக் கட்டுப்படுத்தவும்.

2. இலைப்புள்ளி நோய்: (Leaf Spot) இந்நோயினால் இலைகளில் சிறு சிறு பழுப்பு நிற புள்ளிகள் தோன்றுகின்றன. நாளடைவில் இப்புள்ளிகள் இணைந்து இலையின் பெரும் பகுதிக்கு பரவிவிடுகின்றன. இந்நோய், செடி பெரிதாக வளர்ந்த பிறகே தோன்றும். மிகுதியான தாக்குதலுக்குள்ளான இலைகள் வாடி உதிர்ந்து விடுகின்றன.



இலைப்புள்ளி நோய்

தடுப்பு முறை: ஒரு சத விகித போர்டோ கலவையைத் தெளித்து இந்நோயினின்றும் பயிரைப் பாதுகாக்கவும்.

3. நரம்பு வெளுக்கும் மொசாய்க்பிணி: (Vein Clearing Mosaic) இது ஒரு வைரசு நோயாகும். இந்நோய் தமிழ் நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் காணப்படும். நோயின் முதல் அறிகுறியாக இலையில் உள்ள நரம்புகளிலும் செடியின் மேற்பாகத்தில் உள்ள இலைகளின் ஓரங்களிலும் நிறம் வெளுத்துக் காணப்படும். பின்பு இவை மஞ்சள் நிறம் பெறுகின்றன. இலை

(28-ம் பக்கம் பார்க்கவும்

'மாருத்' சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயமுத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினுல் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்.
(No. C-1, 40404/64—21-4-64.)

குணங்கள் :

சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.

2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்விில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.

3. ஸ்ப்ரேயர் எஃகு தட்டினுல் செய்யப்பட்டவை.

4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.

5. 61 c. m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



மாருத் சார்ஜ் பம்ப்
ரூ. 280

'மாருத்'
நீடித்த அழுத்த சக்தியோடு
முதுகில் சுமந்து செல்லக்
கூடிய ஸ்ப்ரேயர்.

18 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டேயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 290
பித்தளையினுல் செய்யப்பட்டது
ரூ. 230

14 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டேயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 280
பித்தளையினுல் செய்யப்பட்டது
ரூ. 230



தயாரிப்பாளர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
தபால் பெட்டி எண். 539
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், பெங்களூர்-2.



வானொலிச் செய்திகள்

அன்புடையீர்,

நாம், விரும்பாத நிலையில், நம்மை வலுக் கட்டாயமாக போரில் இறங்கும்படி செய்துவிட்டது மண்ணாசை கொண்ட பாகிஸ்தான். நாட்டிற்கு நேர்ந்துள்ள பேராபத்தை, நாட்டினரின் தன்மானத் திற்கும், நாட்டின் சுதந்தரத்திற்கும் ஏற்பட்டுள்ள நலிவை நீக்கவும், மண்ணாசை கொண்ட பாகிஸ்தானின் துராக்கிரமிப்பை தவிடுபொடியாக்கவும், தேசத்திலுள்ள அனைவரும் ஒன்று திரண்டெழுந்துள்ளார்கள். சாதி, சமய பூசல்களை மறந்து, கட்சி வேறுபாடுகளைத் துறந்து, கவிஞர்களும், கலைஞர்களும், அரசியல் தலைவர்களும், தொழிலாளர்களும், மாணவர்களும் மற்றுமுள்ள பொதுமக்களும் ஒன்று திரண்டு நாட்டுப் பாதுகாப்பிற்கு தங்கள் உயிரைக்கூட தியாகம் செய்ய முன்வந்துள்ளார் கள்.

போர் முனைக்கு எல்லோரும் செல்ல இயலாது; செல்லவும் கூடாது. ஒரு பிரிவினர் போர் முனையிலும்; மறுபிரிவினர் போர் முனையிலுள்ளவர்களுக்கு வேண்டிய தேவைகளையும் சரிவர அனுப்ப முயற்சித்தல் வேண்டும். போர் முனையில் வெற்றி காண்பது நம்முடைய உழைப்பிலும், முயற்சியிலும்தான் உள்ளது. போர் முனையிலுள்ளவர்களுக்கு அத்தியாவசிமானது உணவு. மனைவி, மக்களை மறந்து, நாட்டின் பாதுகாப்புக்காக தங்கள் உயிரையே பணயம் வைத்து போரிடும் நமது தோழர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை பல்வழிகளிலும் உற்பத்திச் செய்திட நாம் முழுமூச்சுடன் பாடுபட வேண்டும். வேளாண்மைத் துறையிலுள்ள நாம் எல்லாம் இந்த நெருக்கடி நேரத்தில் தீவிர சாகுபடி செய்யவேண்டும். தீவிர சாகுபடி செய்வது சம்பந்தமா கவும், உற்பத்தி பெருக்கம் சம்பந்தமாகவும் விவசாய இலாகாவினர் அவ்வப்பொழுது தொழில் நுணுக்கங்களை பல வழிகளிலும் பரப்புவதுடன், திருச்சி வானொலி நிலையத்தாரும் மாலை 7–30 மணி முதல் 8–00 மணி வரை விவசாய தொழில் நுணுக்கங்கள் சம்பந்தமாகவும் நவீன சாகுபடி திட்ட சம்பந்தமாகவும் உற் பத்தி பெருக்கம் சம்பந்தமாகவும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒலி பரப்புகின்றனர். இந்த நிகழ்ச்சிகளை நீங்கள் தவறாது கேட்கவும், கேட்டபின் செயலாற்றவும் வேண்டுகிறேன். திருச்சி வானொலி நிலையத்தார் ஒலி பரப்பும் இந்த நிகழ்ச்சிகளை தினசரி மாலை 7–30 முதல் 8–00 மணி வரை கேட்கத்தவறக் கூடாது.

நீங்கள் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தஞ்சையில் நடந்த விவசாய உற்பத்தி கருத்தரங்கின் ரேடியோ வர்ணனை ஒன்றை கேட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். விவசாய உற்பத்திக் கருத்தரங்கை 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27–ந் தேதி துவக்கி வைத்த மத்திய உணவு அமைச்சர் மேன்மை தங்கிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், கருத்தரங்குகளின் முக்கியத்துவம் குறித்தும், விஞ்ஞான ரீதியில் விவசாயம் செய்திட வேண்டிய அவசியம் குறித்தும், விஞ்ஞான அறிவு விவசாயிகளுக்குக் கிடைத்திட வேண்டிய அவசியம் குறித்தும், தெளிவாக சொற்பெருக்காற்றியதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே போர் நடக்கும் இத் தருணத்தில் உணவு உற்பத்தி யைப் பெருக்குவது மிகவும் முக்கியமானது. உங்கள் விவசாயத்தை விஞ்ஞான, முறைப்படி சாகுபடி செய்து அதிக உற்பத்தியை பெருக்க தினந்தோறும் மாலை 7–30 முதல் 8–00 வரை திருச்சி வானொலி நிலைய விவசாய நிகழ்ச்சிகளைக் கேட்டு செயல்பட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் நலனை என்றும் விரும்பும்,
து. கணபதி.
வானொலி விவசாய அலுவலர்,
36–பி, மவுண்டு ரோடு, சென்னை–2.

சென்ற மாதத்தில் நீங்கள் கேட்ட நிகழ்ச்சி களில் நினைவில் கொள்ள வேண்டியவை

தாளடி நெற்பயிருக்கு தீவிர சாகுபடி முறைகள்.

தாளடிப் பட்டத்திற்கென சிபாரிசு செய்யப்படும் பொறுக்கு விதைகள் கோ. 25, கோ. 30, ஏ.டி.டீ. 8, ஏ. எஸ். டி. 5 முதலியவைகளாகும். கோ. 25, கோ. 30 ஆகிய இரண்டு ரகங்களும் கொலை நோய் தாக்காத ரகங்கள் ஆகும். ஏ.டி.டீ. 8 ரகம் குறுகிய காலத்தில் பயிரிட ஏற்றது. பின் தாளடிப் பட்டத்திற்கு நவம்பர் மாதம் வரை நட வேண்டுமானால் ஏ. எஸ். டி. 5 ரகத்தைப் பயிரிடலாம்.

நாற்றங்கால் தயாரிப்பு.—நாற்றங்காலை மேடு பள்ள மில்லாமல் நன்றாக உழுது மட்டப்படுத்த வேண்டும். நாற்றங்காலுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5 டன் பசுந்தழையோ அல்லது 10 டன் தொழு உரமோ போட்டால் போதும். விதைகளை விதைப்பதற்கு முன்பு டில்லக்ஸ், அக்ரோசான் சிரசான் போன்ற பூசணங் கொல்லி மருந்துகளுடன் 1 கிலோ விதைகளுக்கு 2 கிராம் மருந்து வீதம் கலந்து விதைக்க வேண்டும். நாற்று பறிப்பதற்கு 10 நாட் களுக்குமுன் நாற்றின் வளர்ச்சி போதாதென்று தோன்றினால் சென்ட் ஒன்றுக்கு ½ கிலோ

வீரம் பெருக, விளைச்சல் பெருக்குவீர்:

அமோனியம் சல்பேட்டுவீதம் மேலுரமாக போடவேண்டும். நாற்றுகளை வரிசைக்கு வரிசை 20 செண்டிமீட்டர் இடைவெளியும் பயிருக்குப் பயிர் 10 சென்டி மீட்டரும் கொடுத்து நட வேண்டும்.

நடவு வயல்.—தாளடி வயலை நன்ருக உழுது சேருக்கி சமப்படுத்த வேண்டும். குறுவை வயல்களில் வரப் போரங்களில் நெல் பயிர் நட்டவுடன் நன்ருக வளர்ந்த செஸ்பேனியா நட்டுவிட்டால் 3,000 ராத்தல் வரை தழை கொடுக்கும். தழை உரம் கிடைக்காவிட்டால் அதை சரிகட்ட, எக்கர் ஒன்றுக்கு 25 ராத்தல் தழைச் சத்து கொடுக்கக்கூடிய ரசாயன உரங்களையாவது முதலிலேயே வயலுக்குப் போட வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு.—நாற்று பறிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நாற்றங்காலுக்கு பூச்சி கொல்லி, பூசணங் கொல்லி மருந்து கரைசலை தெளிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினல் பிற்பாடு நாற்று பறித்து நடுவதற்கு முன்பு மேற்படி கரைசலில் நாற்றை வேர் பாகத்தில் படாமல் முக்கி எடுத்து பிற்பாடு நடவேண்டும். நட்ட பிற்பாடு 5 நாட்கள் கழித்து மற்ருெரு முறையும் இன்ருெரு மாதம் கழித்து மூன்ரும் முறையாகவும் மேற்படி கரைசலைத் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு பொருத்தமான பொறுக்கு விதை, சிபாரிசு செய்யப்படும் அளவிற்கு உரம் திருந்திய முறை சாகுபடி, பருவத்தில் பயிர்ப் பாதுகாப்பு ஆகியவற்றைக் கையாண்டால் அமோக விளைச்சலைப் பெறலாம்.

(3—8—1965 அன்று திரு வெங்கட சுப்பிரமணியம், மாவட்ட விவசாய அலுவலர் அவர்கள் வாஞெலி உரையின் சுருக்கம்.)

தீவிர விவசாயப் பகுதித் திட்டம்

அதிவிரைவில் விளைவைப் பெருக்க திருந்திய சாகுபடி முறைகளைக் கையாள வேண்டும். நமது மாநிலத்தில் தஞ்சை மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்டம் அமுலில் இருக்கிறது. இந்த திட்டத்தில் நமக்கு நல்ல சில அனுபவங்கள் கிடைத்துள்ளன. தஞ்சை மாவட்டத்தில் உள்ள தீவிர விவசாய அபிவிருத்தித் திட்டத்தில் கிட்டிய அனுபவத்தை ஒட்டி அதே பாணியில் நம் மாநிலத்தில் இன்னும் சில பகுதிகளில் அதாவது திருநெல்வேலி, மதுரை, கோயமுத்தூர், செங்கற்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களிலும் தீவிர விவசாய பகுதித் திட்டம் என்ற பெயரில் 1965-ம் ஆண்டு எப்ரல் மாதத்திலிருந்து அமுலிலுள்ளது.

இத்திட்டம் மேற்கூறிய 4 மாவட்டங்களிலுள்ள 133 பஞ்சாயத்து ஒன்றிப்புகளில் செயல்படுத்தப்படுகிறது. 10,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட பாசனப் பகுதியுள்ள பஞ்சாயத்து ஒன்றிப்புகளுக்கு, மேலும் ஐந்து கிராம நல ஊழியர் களும், ஒரு விவசாய விஸ்தரிப்பு அலுவலரும் நியமிக்கப் பட்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். இத்திட்டத்தின் கீழ் பாசனத்திலுள்ள நெல், சோளம் ராகி போன்ற தானியப் பயிர்களிலும், மாற்றுப் பயிராக செய்யப்படும் பருத்தி, நிலக்கடலை போன்ற பயிர்களிலும், அவ்வப் பயிர்களுக்கான நவீன சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்து, அதிக விளைச்சலை ஏற்படுத்துவதாகும்.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு விவசாயியும், அவர் பண்ணையில் சாகுபடி செய்யப்போகும் பயிர்களுக்கு நவீன முறைகளைக் கடைப்பிடிப்பதற்குத் தேவையான பொருள்களை கணக்கிட்டு, பண்ணைத் திட்டம் தயாரிக்க உதவி செய்யப்படுகிறது. இத்திட்டத்தில் விவசாய இலாகாவினரும், கூட்டுறவு இலாகாவினரும், பாசன இலாகாவினரும், விவசாயப் பெருமக்களும், பஞ்சாயத்து ஒன்றிப்புகளும் இணைந்து செயல்படுகின்றன.

நவீன சாகுபடி முறைகளை அந்தப் பகுதி கிராம நல ஊழியர்கள் நன்ருக விவசாயிகளுக்கு விளக்குவார்கள். தீவிர விவசாயப் பகுதித் திட்டம் நடைபெறும் நான்கு மாவட்டங்களிலும் ஒரே மாதிரியான நவீன சாகுபடி முறைகளை சிபாரிசு செய்ய முடியாது. எனினும் நவீன சாகுபடி முறைகளும் பொதுவான அம்சங்களான பொறுக்கு விதை, நல்ல நாற்று, போதிய உரம், நவீன சாகுபடி கருவி, பயிர்ப்பாதுகாப்பு போன்ற ஐந்து முக்கிய அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்கூறியவற்றை திறம்பட உபயோகிக்க இதுவரை உங்களுக்கு வாய்ப்பும், வசதியும் இல்லாதிருக்கலாம். அக்குறையை நீக்க இத் தீவிர விவசாயப் பகுதித் திட்டம் உங்களை வந்தடைந்துள்ளது. அதன் பலனை நீங்கள் முழுவதும் பெற முன் வருவீர்களாக.

(7—9—65 அன்று விவசாய நெறியாளருக்கு அரசிதழ் உதவியாளரான திரு டி. கணபதி அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்).

ஒருபோக நெல் சாகுபடிக்கு திருந்திய சாகுபடி முறைகள்.

நமது மாகாணத்தில் நெல் சாகுபடியில் முக்கியமானது ஒருபோக சம்பாவாகும். சம்பா நெல்தான், அதிகப் பரப்பில் ஆகஸ்ட்-செப்டம்பரில் சாகுபடி செய்யப் படுகிறது.

சம்பாவிற்கு வேண்டிய பொறுக்கு வித்துக்கள் கோ. 25, கோ. 19, ஆடுதுறை 8 போன்ற ரகங்களாகும். பொறுக்கு வித்துக்களை உபயோகிப்பதால் 10 முதல் 20 சதம் அதிக விளைச்சல் கிடைக்கும். கோ. 25 அதிக மகசூல் தரக்கூடியது; மேலும் குலை நோய் தாக்காத ரகமும் ஆகும். விதைகளை விதைப்பதற்கு முன்னர் அச்ரசான், செரசான், அல்லது டில்லக்ஸ் என்னும் மருந்துடன் கலக்கவேண்டும். 2 கிராம் மருந்துடன் ஒரு கிலோ விதையைக் கலக்கவேண்டும். எக்கருக்கு 18-20 கிலோ விதை போதுமானது.

புழுதி நாற்றங்கால், சேற்று நாற்றங்கால் என இரு வகைப்படும். புழுதி நாற்றங்காலை நன்றாக உழுது ஏக்கருக்கு 10 டன் அல்லது 20 வண்டி தொழுஉரம் போடவேண்டும். சேற்று நாற்றங்காலுக்கு ஏக்கருக்கு 20 வண்டி தொழு உரமோ அல்லது 4,500 கிலோ தழை எரு அல்லது பசுந்தழை அதாவது 20 வண்டி தழை போடவேண்டும். 54 அடி நீளம், 8 அடி அகலமுள்ள பாத்திகள் அமைத்து விதைகள் விதைக்கவேண்டும். சம்பா ரகங்கள் 30 முதல் 40 நாட்கள் வரை நாற்றங்காலில் வளர விடலாம். நாற்று பறிக்க ஒரு வாரத்திற்கு முன் ஒரு செண்டுக்கு அரை கிலோ வீதம் அமோனியம் சல்பேட் தூவவேண்டும்.

நடவு வயலில் இரும்பு கலப்பைக் கொண்டு நன்கு உழ வேண்டும். பின்னர் 2,280 கிலோ பசுந்தாள் அல்லது 5 வண்டி குப்பை போடவேண்டும். கடைசி உழவின் போது ஏக்கருக்கு 68 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், தேவைப் படும் இடங்களுக்கு மியூரியேட் ஆ∴ப் பொட்டாஷும் போட வேண்டும். பின்பு நாற்றுக்களை வரிசையில் 10 அங்குல இடைவெளியும், பயிருக்குப் பயிர் 5 அங்குல இடைவெளியும் விட்டு நடவேண்டும்.

சம்பா பயிர் நட்ட 45-ம் நாள் மேலுரம் போடவேண்டும். மேலுரமாக 33 கிலோ யூரியா அல்லது 68 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 68 கிலோ கால்சியம் அமோனியம் நைட்ரேட் உபயோகப்படுத்தலாம்.

இவ்விதம் நல்ல முறையில் சாகுபடி செய்யப்படும் சம்பா பயிரை பூச்சி, நோய் தாக்காமல் பாதுகாப்பது மிகவும் முக்கியம். சம்பா பயிருக்கு நட்ட 15-ம் நாள் முதல் தடவையும், மருந்தடித்த ஒரு மாதத்திற்கு பின்னர் இரண்டாம் தடவையும் மருந்தடிக்க வேண்டும். பாராதியான் மருந்துடன் காப்பர் கலவை மருந்து கலந்து தெளிக்கவேண்டும்.

மேற்கூறியபடி எல்லா நவீன சாகுபடி முறைகளைக் கையாண்டு அமோக விளைச்சலைப் பெறுவீர்களாக.

[10—9—65 அன்று திரு டி. கணபதி வானொலி விவசாய அலுவலர் அவர்கள் ஆற்றிய வானொலி உரையின் சுருக்கம்].

தென்னை நட்டு பலனடைவீர்!

தென்னை மரம், அதிலிருந்து கிடைக்கும் கொப்பரை, எண்ணெய், பிண்ணாக்கு, நார் முதலிய முக்கியமான வியாபாரப் பொருள்களுக்காக வேண்டி வளர்க்கப்படுகிறது. முக்கியமாக தென்னை வகைகளில் நெட்டை ரகம், குட்டை ரகம் என இருவகை உண்டு. நெட்டை ரகம் பொதுவாக நம் நாட்டில் பயிரிடப்படுகிறது. நட்ட 7 அல்லது 8-வது வருடங்களில் பலனுக்கு வரும். வயது சுமார் 80 வருடங்கள். குட்டை ரகம் மரங்கள் நட்ட 4-வது ஆண்டில் பலனுக்கு வரும். இதன் வயது 30 வருடங்களாகும்.

தென்னை நடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன் சுமார் 1'×1'×1' கன மீட்டர் குழி வெட்டவேண்டும். தென்னைக்கு சூரிய வெளிச்சம் மிகவும் முக்கியமானது. இதனால் தென்னை மரத்தை 8 மீட்டர் இடைவெளி விட்டு நடவேண்டும். தென்னந்தோப்பில் கடலை, பயறு வகைகள், சிறு தானியங்கள், காய்கறிகள், பசுந்தாள் உரப்பியிர்கள் போன்றவற்றை ஊடு பயிராக பயிரிடலாம். உரமிடும் பொழுது வருடந்தோறும் 40 கிலோ மக்கிய தொழு உரம், 10 கிலோ சாம்பல் முதலியவைகளை மரத்திற்கு வேர் மண்டலப் பகுதியில் இடவேண்டும். இராசயன உரம் 1½ கிலோ அமோனியம் சல்பேட்டு, 1¾ கிலோ சூப்பர் பாஸ்பேட்டு, 1 கிலோ மியூரியேட் ஆ∴ப் பொட்டாஷ் ஒவ்வொரு மரத்திற்கும் இடவேண்டும்.

தென்னை மரத்தை கருப்பு வண்டு தாக்காமலிருக்க பி.எச்.சி. 10 சதம் மருந்துடன் சமமாக மணல் கலந்து தூவலாம். தூண்டில் முள் முனையுடைய இரும்புக் கம்பியைக் கொண்டு குத்தி எடுக்கலாம். கருந்தலைப் புழுவைத் தடுக்க 50% டி.டி.டீ. தெளித்து கட்டுப்படுத்தலாம். குறுத்தழுகல் நோயைத் தடுக்க 1% சத போர்டோ கலவை தெளிக்கலாம்.

மேற்கூறிய முறைகளைக் கையாண்டால் வருடம் மரத்திற்கு ரூ. 20 நிகர வருமானம் கிடைக்கும்.

கீழ்க்கண்ட இடங்களில் அரசாங்கத்தாரால் தென்னங் கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகிறது.

1. தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, மூவானூர்.
2. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம்.
3. மதுரை மாவட்டத்தில் சோழவந்தான், உத்தமபுரம்.
4. திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை, வடகரை.
5. கன்னியாகுமரி மாவட்டத்தில் புத்தளம்.
6. சேலம் மாவட்டத்தில் சேலத்தில்.
7. கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோவை, சந்திராபுரம்.
8. வட ஆற்காடு மாவட்டத்தில் குடியாத்தம்.
9. செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆத்தூர்.
10. தென் ஆற்காடு மாவட்டத்தில் திண்டிவனம்.
11. இராமநாதபுரம் மாவட்டத்தில் சிங்கம்புனரி ஆகியவையாகும்.

தென்னங்கன்று 90 பைசா சகாய விலையில் கொடுக்கப்படுகிறது.

[17—9—65 அன்று திரு ஜி. துரைசாமி தென்னை விஸ்தரிப்பு அலுவலர் பட்டுக்கோட்டை அவர்கள் ஆற்றிய வானொலி உரையின் சுருக்கம்].

டாடா பைஸன் மற்றும் ராலி
இயற்கையின் மர்மங்களை ஆராய்கிருர்கள் !

எப்பொழுதும்போல் டாடா தொடங்கினர்: ''இயற்கையின் மர்மங்களை விளக்குவது என்பது இயலாது.''

''வர்ணமயமான பூக்கள், பட்சிஜாலங்கள், தேனீக்கள்...''என்று கவிபாடினர் பைஸன்.

''...அழகழகான பெண்கள்'' இது ராலி. அவருடைய ஆலோசனையின் முடிவு!

டாடா தொடர்ந்தார்: ''சின்னஞ்சிறு ரப்பர் செடியைப் பாருங்கள். அதனுடைய வாழ்க்கைத் தத்துவம், ஆகா. வெண்மையான பகட்டற்ற ரப்பர்.''

''இயற்கையின் அற்புதத்தை யாரால் அளவிட முடியும்?'' என்ருர் பைஸன்!

''ஆம், அவள் பெயர் கல்பனு'' என்று ஆவேசத்துடன் மொழிந்தார் ராலி.

இடையூறுகளை ஒதுக்கிவிட்டு மேலும் கூறுகிருர் டாடா: ''இந்த சின்னஞ்சிறு ரப்பர் செடியில் இயற்கை தன் வளமையை வெளிப்படுத்துகிறது. ரப்பரிலிருந்துதான் எத்தனை பொருள்கள்... டயர்கள், ஸஸ்பெண்டர்கள், கன்வேயர் பெல்ட்டுகள், விளையாட்டு பலூன்கள்...''

''உண்டை வில்'' என்ருர் பைஸன்.

டாடா மேலும் சொல்கிருர்: ''வியாபார ரீதியாகப் பாருங்கள். ராலியின் 'மரம்' மார்க் உரங்கள் மேலும் சிறந்த ரப்பர் பயிரை உற்பத்தி செய்ய உதவுகின்றன. டாடா பைஸன் பூச்சி மருந்துகளோ அவற்றைப் பாதுகாத்து மேலும் அதிகமான விளைச்சலுக்கு வழிசெய்கின்றன.''

''அவளுடைய வீட்டுப் பெயர் என்ன என்பதை நான் அறியேன்'' என்று முணுமுணுத்தார் ராலி.

டாடா பைஸன் ராலீஸ் பயிர் அபிவிருத்திக்குப் பணிபுரிகின்றது

TATA FISON RALLIS
TREE BRAND
FERTILIZERS AND PESTICIDES

SHB1-RF-89 TAM

நீங்கள் கேட்கப் போகும் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்

(செவ்வாய், வெள்ளிக்கிழமைதோறும் இரவு 7–30-லிருந்து 8 மணி வரை திருச்சி, சென்னை-எ, திருநெல்வேலி நிலையங்களில் கேட்கலாம்).

வெள்ளி 5—11—1965

வாழை தீவிர சாகுபடியும் அதன் தீவிர சாகுபடிக் குறிப்புகளும்.	திரு சி. இராமானுஜம், மாவட்ட விவசாய அலுவலர்.

செவ்வாய் 9—11—1965

வயல் எலிகளை கொல்லுவது எப்படி ?	திரு. ராமகிருஷ்ணன், உதவி பூச்சியல் வல்லுனர், ஆடுதுறை.

வெள்ளி 12—11—1965

எம்.சி.யு. 2, எம்.சி.யு. 3, பருத்தி சாகுபடி.	திரு. பி. வி. மாரப்பன் உதவி பருத்தி நிபுணர்.

வெள்ளி 19—11—1965

தாளடிப் பயிரில் நடத்திய நிரூபணங்கள்.	திரு. எம். காசி விஸ்வநாதன், வேளாண் வல்லுனர் தீவிர விவசாய மாவட்டத் திட்டம், தஞ்சாவூர்.

வெள்ளி 26—11—1965

பாக்கு சாகுபடி.	திரு. எம். மகாலிங்கம், பாக்கு அபிவிருத்தி அலுவலர், கோயம்புத்தூர்.

அட்டையில் காட்சி தரும்.

எக்ஸ் 3 வீரிய கம்பு

* எக்ஸ் 3 வீரிய கம்பு 80—90 நாட்களில் (இறைவை) 2.000 கிலோ தானியம் கொடுக்கிறது.

* மானுவாரியாக இருந்தால் மார்ச்–எப்ரலிலும், இறைவைப் பயிராக செப்டம்பரிலும் விதைக்கலாம்.

* அதிக உரம் ஏற்று அமோக மகசூல் கொடுக்கக் கூடியது.

* மானுவாரி பயிருக்கு 10 வண்டி தொழு உரம் அல்லது கம்போஸ்ட்டும், 45 கிலோ அமோனியம் சல்பேட்டும் போட வேண்டும்.

* இறைவை பயிருக்கு 10 வண்டி தொழு உரம் அல்லது கம்போஸ்ட்டும், 50 கிலோ சூப்பரும், 90 கிலோ அமோனியம் சல்பேட்டும் போடவேண்டும்.

* விதையை 0·6 கிலோ கிராமுக்கு ஒரு கிராம் வீதம் அக்ரசான் மருந்துடன் கலந்து ஏக்கருக்கு 3½ கிலோ கிராம் விதை விதைக்கவும்.

* எல்லா மாவட்டங்களிலும் பயிரிட ஏற்றது.

* கதிரிலிருந்து தானியங்களைப் பிரித்தெடுப்பது எளிது.

ஒவ்வொரு பருவத்திற்கும் விவசாய டெப்போவிலிருந்து புதிய விதைகளையே வாங்கி விதைக்கவும்.

கடமையில் வீரராய் விளங்குவோம்

வீரமும் தியாகமும் எங்ஙனம் காட்டுவீர் ?

DA-65/F1

பாலும் பாத்திரமும்

[எம். ஆர். இருதயராஜ், எம். எஸ்ஸி. (விவசாயம்), உதவி வேளாண்மை விரிவுரையாளர்.]

"ஆலும் வேலும் பல்லிற்குறுதி; நாலும் இரண்டும் சொல்லிற்குறுதி" என்பது தமிழர் போற்றிய சொல் வளம். அவ்வாறே, பாலும் தேனும் பண்டைத் தமிழர் பாங்குடன் போற்றிய உணவுப் பண்டம். உண்ண உண்ணத் தெவிட்டா உணவுப் பொருளாய் உலகம் முழுவதும் உண்டு மகிழ்வது பால். குழந்தை முதல் கிழவர் வரை அனைவருக்கும் ஏற்ற ஒரு சத்துள்ள உணவு பாலாகும். எனவேதான், கறந்தது முதல் பயன் படுத்தும்வரை, பாலைச் சுத்தமாகவும், நல்லதாகவும் வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது.

"ஒரு குடம் பாலில் ஒரு துளி நஞ்சு" என்பது பழமொழியாகும். ஒரு துளி நஞ்சு எவ்வாறு பாலை நஞ்சாக மாற்றிவிடுமோ அப்படிதான் பால் பாத்திரங்களில் தங்கும் அழுக்குகளும், பாலின் திருந்திய துணுக்குகளும் பாலை நஞ்சாக மாற்றி அதனைப் பயனற்றதாகச் செய்துவிடும். ஆகவேதான் வீட்டிலும், பால் பண்ணைகளிலும், பால் புழங்கும் பாத்திரங்களைச் சுத்தமாகவும், அழுக்கண்டாதவைகளாகவும் வைத்திருக்க வேண்டியது இன்றியமையாததொன்றாகும்.

நல்ல சுத்தமான பால் உற்பத்திக்குப் பால்பண்ணையில் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் நன்றாகக் கழுவி நோய்க் கிருமிகள் அணுகாதனவாய் பார்த்துக் கொள்ளவேண்டும். பயன்படுத்தப்படும் பாத்திரங்களைச் சுத்தம் செய்யத் தேவையான சாதனங்களையும், ஒழுங்கான செய்முறை வழிவகைகளையும், முறையாகத் தினந்தோறும் கைக்கொண்டு வருவோமானால் பண்ணை பாத்திரங்களை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருப்பது கடினமானதொரு செயலல்ல.

சுத்தம் செய்யத் தேவையான சாதனங்கள் வருமாறு:— 1. தண்ணீரும், வெந்நீரும். 2. உலோகத்தாலான கழுவுத் தொட்டி, 3. அழுத்தித் துடைத்துச் சுத்தம் செய்யும் பிரஷ். 4. களிம்பறுக்கும் இரசாயனப் பொருட்கள்.

முதலில் பால் கறப்பதற்குப் பயன்படும் பாத்திரங்களைப் பால் கறந்து முடித்தவுடன் தண்ணீரில் அலசி கழுவுதல் வேண்டும். பால் கறவைப் பாத்திரங்களையும், பால் சேமிப்புப் பாத்திரங்களையும், பால் அவற்றிலிருந்து நீக்கியவுடன் குளிர்ந்த நீரில் அலசிக் கழுவுதல் வேண்டும். அத்துடன் அப்பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி சுத்தம் செய்யும் வரை அவற்றை ஈரமாக வைத்திருக்கவேண்டும்.

அலசிக் கழுவுவதற்குக் குளிர்ந்த அல்லது வெதுவெதுப்பான நீரை மட்டுமே பயன்படுத்த வேண்டும். வெந்நீரைப் பயன்படுத்தினால் பால் புரதங்கள் உறைந்து பாத்திரத்தின் உட்புறத்தில் படிந்துவிடும்.

பாத்திரத்தில் ஒட்டியுள்ள அழுக்குகளையும் பால் துணுக்குகளையும் நீக்குவதற்குச் சூடான களிம்பறுக்கும் கரைசல்களைப் பயன்படுத்த வேண்டும். இக்கரைசல்களால் பாத்திரத்தின் எல்லா பக்கங்களையும் பிரஷ் கொண்டு நன்றாகத் தேய்த்துக் கழுவவேண்டும். பயன்படுத்தும் பிரஷானது நல்லதாகவும், பாத்திரத்தின் எல்லா மூலை முடுக்குகளையும் சுத்தம் செய்யக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். தேய்த்துக் கழுவ வெந்நீரைப் பயன்படுத்த வேண்டும். இவ்வெந்நீர் 105·F (பாரன்ஹீட்டும்) அதற்கு மேலும் வெப்பமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். ஏனெனில் அவ்வெப்ப நிலையில்தான் வெண்ணெய் கொழுப்பானது உருகி எளிதில் நீக்குவதற்குரிய நிலையை அடைகிறது.

பால் கொழுப்புப் பொருள்களும், மற்ற பால் துணுக்குகளும் கரைந்து வெளியேற்றுவதற்கு களிம்பறுக்கும் கரைசல்கள் பயன்படுகின்றன. இதற்கு மிருதுவான நீரை பயன்படுத்த வேண்டும். கடினநீரைப் பயன்படுத்தினால் அதில் கலந்துள்ள உப்புக்கள் பாத்திரத்தின் பக்கங்களில் படிந்து பாத்திரத்தைப் பயனற்றதாக ஆக்கிவிடும். எனவே, நீரைப் பயன்படுத்தும்போது, நீரை மிருதுவாக்கும் உப்புக்களை அந்நீருடன் சேர்த்துப் பயன்படுத்த வேண்டும்.

பால்பண்ணை பாத்திரங்களைச் சுத்தம் செய்ய உப்புக் காகிதம் போன்ற சொறசொறப்பான பொருள்களைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் இவைகள் பாத்திரத்தில் கீறல்களை உண்டாக்கிச் சுத்தமாக கழுவுவதற்குத் தடையாக அமையும். மேலும், சுத்தமாகக் கழுவுவதற்குத் துணிகளைப் பயன்படுத்தக்கூடாது; அவை பாத்திரங்களில் உள்ள அழுக்குகளை நீக்குவதற்குப் பதிலாக அவற்றில் உள்ள அழுக்குகளைப் பாத்திரத்திலேயே படியுமாறு செய்யும்.

களிம்பறுக்கும், கரைசல்களை பயன்படுத்திக் கழுவிய பின் மீண்டும் பாத்திரத்தைச் சுத்தமான நீரினால் அலசிக் கழுவுதல் வேண்டும். இவ்வாறு செய்வதால் பாத்திரத்தின் பக்கங்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் களிம்பறுக்கும் கரைசலும் மற்ற தேவையற்ற பொருள்களும் அகற்றப் பட்டுவிடும். வெந்நீருக்கு நுண் கிருமிகளை அழிக்கும் ஆற்றல் உள்ளதால், இம்முறைக்கு வெந்நீரைப் பயன் படுத்துவதே சிறந்தாகும்.

பால் பாத்திரங்களிலுள்ள பால் துணுக்குகளையும், அழுக்குகளையும் நீக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களை களிம்பறுக்கும் பொருட்கள் என்கிறோம். பொதுவாக இவைகள் சோடியம் கலவைகளே ஆகும். சோடியம் கலவைகள் கரைசலாக இருக்கும்போது துணுக்கு

போர்முனை வெற்றி ஏர்முனையிலும் உண்டு.

களையும் அழுக்குகளையும் கரைத்து அவைகளை எளிதில் அகற்ற உதவுகின்றன. களிம்பறுக்கும் பொருட்களை குறிப் பிட்ட அளவிலேயே பயன்படுத்த வேண்டும். எளிதில் கிடைக்கக்கூடிய களிம்பறுக்கும் பொருட்களும், அதன் அளவுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1.	சோடா ஆஷ்	2 முதல் 4 அவுன்ஸ் 10 காலன் தண்ணீரில்.
2.	வாஷிங் சோடா	4 முதல் 8 அவுன்ஸ் 10 காலன் தண்ணீரில்.
3.	டிரை சோடியம் பாஸ்பேட்	4 அவுன்ஸ் 10 காலன் தண்ணீ ரில்.
4.	சோடியம் மெட்டா சிலிகேட்	4 அவுன்ஸ் 10 காலன் தண்ணீ ரில்.

காஸ்டிக் சோடா போன்ற வீரியமான காரப் பொருட்களைக் களிம்பறுக்கும் பொருள்களாகப் பயன்படுத்தக்கூடாது. ஏனெனில் இவைகள் அலுமினியப் பாத்திரங்களை அரித்துத் தின்றுவிடும். அது போன்றே, சோப்பையும் சுத்தம் செய்யப் பயன்படுத்துதல் கூடாது. பொதுவாக சோப்பை பயன்படுத்துவதால் பாத்திரம் சுத்தமடைந்துவிடுமென நாம் கருதுகிறோம். ஆனால், சோப்பிலிருந்து உண்டாகும் நுரையானது பாத்திரத்தின் பக்கங்களில் படிந்து ஒரு வித மெல்லிய படலத்தை உண்டாக்கும். இதனால் பாத்திரங்களைச் செவ்வனே சுத்தம் செய்ய முடிவதில்லை.

பால் பண்ணையில் பயன்படுத்தப்படும் பாத்திரங்களை எப்பொழுதும் நல்ல முறையில் வைத்திருப்பதோடு தேவைக்கேற்ப அடிக்கடி அவைகளுக்கு மூலாம் பூசுதல் வேண்டும். தேய்ந்துபோனவைகளையும், தொழிலுக்குத் தகுதியற்ற நிலையடைந்தவைகளையும் உடனுக்குடனேயே மாற்றி விடுதல் நல்ல முறையாகும். பண்ணையில் பயன் படும் பாத்திரங்கள் விளிம்பற்றவைகளாக இருத்தல் வேண்டும். ஏனெனில் விளிம்புகளுக்கிடையிலும், மடிப்புக் களிலும், அழுக்குகள் தங்க வழியமையும். அன்றியும் தூர்விட்டுள்ள பகுதிகளையும், துருப்பிடித்துள்ள பகுதிகளை யும் சொற சொறப்பான பாகங்களையும், சீரிய முறையில் சுத்தம் செய்ய இயலாமல் போய்விடும். அத்துடன் அவற்றில் நுண் உயிர்க்கிருமிகள் தங்கி உயிர்வாழ வழி யமைந்துவிடும். மேலும் நுண்ணுயிர் கிருமிகளை அழிக்கும் செயலும் முழுமை பெறாது போய்விடும்.

பால் மக்கள் உள்ளத்தையும், உடலையும் வளர்க்கும் நல்ல உணவு. அந்தப் பாலைப் பாங்கோடு பாதுகாத்தல் இன்றியமையாமததாகும். பாலும், பாத்திரமும் சுத்த மாக அமைப்பதின் மூலம் வீடும், நாடும் நலம்பெற வழி அமையும். எடுகள் போற்றும் இம்முறையைப் போற்றி வளர்த்தல் நம் கடமையாகும்.

20-ம் பக்கத் தொடர்ச்சி

நரம்புகளும் இவ்வாறு மாற்றமடைவதால் அவற் றிற்கு இடைப்பட்ட பகுதிகள் மட்டுமே பசுமை நிறத்தில் காணப்படுகின்றன. இறுதியில் இலை முழுதும் பசுமை யிழந்து தோன்றும். இலையின் அடிப்பாகத்தில் காணும் நரம்புகள் தடித்துக் காட்சியளிக்கின்றன. இந்நோயினால் செடி காய்ந்து விடா விட்டாலும் வளர்ச்சி குன்றித் தென் படுகிறது. சிறிய ஒழுங்கற்ற வடிவத்தைக் கொண்ட ஒரு

நரம்பு வெளுக்கும் மொசாய்ப்பிணி

சில காய்களே செடிகளில் உண்டாகின்றன. காய்களும் மென்மையிழந்து கடினமாகிவிடுகின்றன. இந்நோய் ஒரு வகை வெள்ளைப் பூச்சிகளால் (Bemisia tabaci) பாதிக் கப்பட்ட செடியிலிருந்து மற்ற செடிகளுக்குப் பரவு கிறது.

தடுப்பு முறை: 1. தாக்கப்பட்ட வெண்டைச் செடி களைப் பிடுங்கி அழித்து விடுதல் வேண்டும்.

2. இந்நோயால் பாதிக்கப்படும் மற்ற பயிர்களையும் (Hilriscus tetraphyllus) நீக்கி விடவேண்டும்.

3. வெண்டை பயிரிடப்படும் நிலத்திலும் அடுத்துள்ள நிலங்களிலும் களைகளை வளர விடாமல் அகற்றிவிட வேண்டும்.

4. வியாதியினைப் பரவச் செய்யும் வெள்ளைப் பூச்சி களை (White flies), பூச்சி கொல்லி மருந்தினை உபயோ கித்து அப்போதைககப்போது அழித்துவிடவேண்டும். மூன்று வாரத்திற்கு ஒரு முறை மீன் எண்ணெய்-சோப்பினைத் (Fish oil rosin soap) தெளித்து இப்பூச்சி களைக் கட்டுப்படுத்தலாம்.

ஏர்முனை விளைச்சல் எதிரியை விரட்டும்.

1965-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதக் கால நிலை அறிக்கை

[சி. பாலசுப்ரமணியன், பி.ஏ., பி.எஸ்ஸி. (ஏஜி.), சி. ரங்கநாதன், பி.எஸ்ஸி. (ஏஜி.)
விவசாயக் கால நிலை ஆய்வுப் பிரிவு, கோயமுத்தூர்-3.]

இம் மாதத்தில் முதல் நான்கு தினங்களில் தமிழ் நாட்டின் குறிப்பிட்ட சில இடங்களில் மழை பெய்தது. ஆனால் ஐந்தாம் தேதியன்று சிற்சில இடங்களில் மட்டும் மழை பெய்தது. பின்னர் 6–ந் தேதியன்று குறிப்பிட்ட இடங்களிலும், 7–ந் தேதியன்று சிற்சில இடங்களில் லேசான மழை பெய்தது. 8,9–ந் தேதிகளில் பொதுவாக குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே மழை பெய்தது. அடுத்த இரு நாட்களிலும் சிற்சில இடங்களில் மழை இருந்தது. 12, 13 தேதிகளில் தமிழ் நாடெங்கும் சற்று பரவலாக மழை பெய்தது. 14 முதல் 18-ந் தேதிவரை தமிழகத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் மழை இருந்தது. அதன் பின்னர் 19 முதல் 21-ந் தேதிவரை மூன்று நாட்களில் சிற்சில இடங்களிலும், 22, 24 தேதிகளில் குறிப்பிட்ட பகுதிகளிலும் பருவ மழை பெய்தது. ஆனால் 23-ந் தேதியன்று தமிழகம் எங்கும் வரட்சி நிலையே நிலவியது. 25 முதல் 28 வரை நான்கு நாட்களில் தமிழகத்தில் குறிப்பிட்ட பகுதிகளில் சில இடங்களில் மழை பொழிந்தது. 29-ம் தேதியன்று சற்றுப் பரவலான மழையும், இம்மாதக் கடைசி இரு நாட்களில் குறிப்பிட்ட பகுதிகளிலும் மழை பெய்தது.

இம் மாதத்தில் பகல் வெப்பநிலையில் பெருத்த மாறுதல்கள் எதுவும் இல்லை.

காலநிலையும் பயிர்வளர்ச்சியும்

செங்கற்பட்டு, தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் இம்மாதம் சற்று அதிகமான மழை பெய்து இருக்கிறது. திருக்குப்பம் பகுதியில் பெய்த மழை சம்பா நடவுக்கு உதவியது. ஆனால் சொர்ணவாரி நெல் அறுவடைக்கும், காயவைக்கவும் இடையூறு ஆயிற்று. குடியாத்தத்தில் கரும்பு, நெல், நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு இம் மழை உகந்து இருந்தது. இங்கு கரும்பிலும், கத்தரியிலும் துளைப்பான்கள் மிதமாகக் காணப்பட்டன. பாலூரில் நிலங்கள் உழுது பண்படுத்த உதவியது. திண்டிவனத்தில் நிலக்கடலை, ஆமணக்கு, சோளம், கம்பு, மற்றும் காய்கறி விதைப்பதற்கு அங்கு பெய்த சற்று அதிகமான மழை ஏற்றதாய் இருந்தது. ஆனால் இங்கு நிலக்கடலையில் சுருள் பூச்சிகள் சுமாராகவும், வேர் அழுகல் நோய் மிகுதியாகவும், ஆமணக்கில் கொக்கிப் புழுக்கள் சற்று அதிகமாகவும் காணப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறை பகுதியில் மிக அதிகமான மழை பெய்தது. இம் மழை சம்பா, குறுவை நாற்றங்கால்களுக்கு உதவியது. பட்டுக்கோட்டையில் ADT. 27 நெற்பயிரில் சிறிதளவு கொள்ளை நோய் காணப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் சற்று அதிகமான மழை பெய்தது. கரூரில் பெய்த மழையால் சோளம், நிலக்கடலை, கரும்பு மற்றும் ராகி முதலியன பயனுற்றன. இங்கு சோளப் பயிரில் சிவப்பு வண்டுகளும், நிலக்கடலையில் சுருள் பூச்சிகளும் வெகுவாகக் காணப்பட்டன.

திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் சுமாரான மழை பெய்தது. கோவில்பட்டியில் பெய்த மழை கம்புப் பயிர் பூக்க உதவியது. ஆனால் குதிரை வாலிப் பயிரில் சிறிதளவு அசுவினியும், கொள்ளை நோயும் தென்பட்டன. சங்கரன் கோயிலில் பெய்த மழையினால் மிளகாய், நிலக்கடலை, நெல் முதலியன பயனடைந்தன. மேலும் நெற்பயிருக்கு நிலங்கள் உழுது தயாரிக்கப்பட்டன. இராமநாதபுரத்தில் பெய்த மழையில் சிறு தானியங்களும், நெல் நிலக்கடலையும் விதைக்கப்பட்டன. சாத்தூரில் பெய்த மழையால் கம்பு, பருத்தி, மிளகாய் ஆகியவை விதைக்க நிலங்கள் பண்படுத்தப்பட்டன. மேலும் நிலக்கடலை சோளம் விதைப்புக்கு வந்தன. MCU. 2 பருத்தியில் பறிப்பும் நடைபெற்றது. மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களில் இம் மாதங்களில் மழை மிகவும் குறைவு. உசிலம்பட்டியில் பெய்த மழையால் நிலக்கடலை, சோளம், பயறு வகைகள் விதைக்கப்பட்டன. ஆனால் இங்கு

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம்:

ராஜா பண்ணைத் தோட்டம்

இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி

வெண்டை

மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி

கொத்தவரை

ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற

கத்திரி

புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி

வெங்காயம்

இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங் கன்றுகள், கீரை நாசினிகள்

கிடைக்குமிடம் :—

ராஜா பண்ணைத் தோட்டம்

2, வைத்தியராமய்யர் தெரு, தி. நகர்,
[இந்தி பிரசார சபா அருகில்], சென்னை-17.

தந்தி : RAJSEED போன் : 42263

கடலையில் ஓரளவு சிவப்புக் கம்பளி பூச்சிகள் காணப்பட்டன. கன்னியாகுமரியில் போதிய மழை இன்றி மாமரத்தின் வளர்ச்சி தடைப்பட்டது. மேலும் மாமரத்தில் சாம்பல் நோய் காணப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் சற்று கனத்த மழை இருந்தது. இங்கு ராகி நடவுக்கு வந்தது. நிலக்கடலை, ஆமணக்கு விதைப்புக்கு வந்தன. தவிர, சிவப்பு கம்பளி பூச்சிகள் எல்லா வட்டாரங்களிலும் நிலக்கடலை பயிரை தாக்கின.

கோயமுத்தூர் மாவட்டத்தில் மிக சொற்ப மழையே பெய்தது. இங்கு காட்டுச் சோளம், நிலக்கடலை விதைப்பும், நெல் நடவும் நடைபெற்றன. இங்கு நெற்பயிரை நாவாய் பூச்சிகளும், இலைப்புள்ளி நோயும் தாக்கின. ராகியில் அசுவினியும், நாவாய் பூச்சிகளும் கொள்ளை நோயும், தக்காளியில் துளைப்பான்களும், இலை புள்ளி நோயும், மிளகாயில் திரிப்ஸும் காணப்பட்டன. ஈரோட்டில் நிலக்கடலை விதைப்பு நடந்தது. குன்னத்தூர் பகுதியில் நிலக்கடலையில் சிவப்பு கம்பளி பூச்சிகள் காணப்பட்டன. பொள்ளாச்சி, ஆளியாறு பகுதிகளில் அதிக மழையால் ராகி, சோளம் முதலியன பாதிக்கப்பட்டன. மிளகாய் பயிரைத் திரிப்ஸ் தாக்கின.

நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் நீங்கலாக எஞ்சிய பகுதிகளில் சுமாரான மழையே இருந்தது. இம்மழை உருளைக்கிழங்கு, காய்கறிகள் மற்றும் தோட்டக்கால் பயிர்களுக்கு உதவிற்று. உருளைக்கிழங்கு அறுவடையும் இரண்டாம் போக உருளைக்கிழங்கு நடவும் நடைபெற்றது. தவிர இப்பயிரில் சிறிதளவு வாடல் நோயும் தென்பட்டது. நஞ்சநாடு பகுதியில் உருளைக்கிழங்கு பயிருக்கு நிலங்கள் உழுது பண்படுத்தப்பட்டன.

இம் மாதத்தின் குறிப்பிடத்தக்க மழையளவுகளும் பிராந்திய மழை அளவுகளும் பின்வருமாறு.

குறிப்பிடத்தக்க மழை அளவுகள்
(அங்குலத்தில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	பெய்த மழை.
1	5–8–65	ஆடுதுறை	2·27
2	6–8–65	திரூர்	2·10
3	ஷை	திருச்சிராப்பள்ளி	3·07
4	7–8–65	பாலூர்	3·10
5	8–8–65	சேலம்	2·21
6	15–8–65	உதகமண்டலம்	2·00

பிராந்திய மழையளவுகள் (அங்குலத்தில்)

வரிசை எண்	பிராந்தியத்தின் பெயர்.	ஆகஸ்டு மாதம் பெய்த மழை.	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
1	வட பிராந்தியம்	6·7	+1·0	அதிகம்
2	கீழ்கரைப் பிராந்தியம்	7·6	+3·1	மிக அதிகம்
3	மத்திய பிராந்தியம்	5·2	+1·5	அதிகம்
4	தென் பிராந்தியம்	1·6	—0·2	சிறிது குறைவு
5	மலை பிராந்தியம்	6·6	+0·3	சிறிது அதிகம்

1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதக் காலநிலை அறிக்கை
மழை அளவு (அங்குலத்தில்)

இடத்தின் பெயர். (1)	இம்மாதத்திய மொத்த மழை (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	ஜனவரி 1-ம் தேதி முதல் இம்மாதம் முடிய மொத்த மழையளவு (4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்) ..	5·2	—0·6	15·5
திரூர்குப்பம் *	9·3	+2·2	13·8
வேலூர்	6·9	+1·2	14·8
குடியாத்தம் *	5·2	+1·0	11·3
கீழ்கரைப் பிராந்தியம்			
பாலூர் *	9·9	+5·2	19·1
திண்டிவனம் *	8·7	+1·6	17·1
கடலூர்	7·5	+2·7	16·8
நாகப்பட்டணம்	3·7	+0·7	12·5
ஆடுதுறை *	9·5	+6·5	16·6
பட்டுக்கோட்டை *	6·4	+1·8	14·4
மத்திய பிராந்தியம்			
சேலம்	10·1	+3·6	18·0
சேலம் *	8·7	+3·6	18·1
கோயம்புத்தூர் *	0·9	—0·5	9·7
கோயம்புத்தூர்	0·8	—0·4	6·1
ஆளியார் நகர் *	2·0	—1·6	9·3
திருச்சிராப்பள்ளி	8·6	+4·5	15·0
தென் பிராந்தியம்			
மதுரை	3·5	—0·5	7·3
பாம்பன்	1·1	+0·5	6·5
கோவில்பட்டி *	4.4	+3·4	11·5
பாளையங்கோட்டை ..	1·7	+1·0	6·0
அம்பாசமுத்திரம் *	0·5	†	7·2
நாகர்கோயில் *	இல்லை	—3·4	19·9
கன்னியாகுமரி *	0·1	—2·0	9·9
மலை பிராந்தியம்			
கோடைக்கானல்	9·5	+2·5	30·9
கூனூர் *	6·4	+3·3	24·7
உதகமண்டலம் *	5·9	—0·1	20·6
நஞ்சநாடு *	4·5	—4·6	24·9

குறிப்பு.—*=விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள்.
†=0·04 அங்குல மழை.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு, விவசாயத் துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.



உயர்நிலைப் பள்ளிகளுக்கான தோட்டப் போட்டியில் முதற் பரிசு பெற்ற சங்கரலிங்க நாடார் உயர்நிலைப்பள்ளியின் பிரதிநிதிக்கு, விவசாய அமைச்சர் கேடயம் வழங்கு கிறார்



கல்லூரிகளுக்கான காய்கறித் தோட்டப் போட்டியில் முதற் பரிசு பெற்ற மேரி ராணிக் கல்லூரி சார்பில் கேடயம் பெறுதல்

காய்கறித் தோட்டப் போட்டியில் பரிசுபெற்ற திருமதி டேவிட் அவர்கள் பரிசு பெறுதல்

[காய்கறித் தோட்டப் போட்டி பரிசளிப்பு விழா 29—9—65 அன்று அடையாறு அவ்வை இல்லத்தில் நடத்தபோது எடுத்த படங்கள்]

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1965



29—9—65 அன்று அவ்வை இல்லத்தில் நடந்த 'காய்கறித் தோட்டப் பரிசளிப்பு விழாவில்' விவசாய நெறியாளர் திரு கே. வி. ராமநாதன் உரையாற்றுகிறார். விவசாய அமைச்சர் திரு பி. கக்கன் அவர்களும், திருமதி கக்கன் அவர்களும் மேடையில் அமர்ந்துள்ளனர்



பிறநிறுவனங்களுக்கான காய்கறித் தோட்டப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கல்வித் துறை நெறியாளரின் சார்பில் பரிசுக் கோப்பை பெறுதல்



ஆரம்பப் பள்ளிகளுக்கான காய்கறித் தோட்டப் போட்டியில் முதற்பரிசு பெற்ற வித்யா பாரதியின் பிரதிநிதி விவசாய அமைச்சரிடமிருந்து கேடயம் பெறுகின்றார். கூட்டு விவசாய நெறியாளர் திரு பசுலுல்லா கான் உடன் இருக்கிறார்